மங்கள வைபவங்களுக்கு
ஏற்ற பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ காஞ்சிபுரம்
★ ...
★ டபிள் செற் பீஸ்
பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான
பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 28 வெள்ளிக்கிழமை (14 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 324



தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும், அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும்இடையில் நேற்று நடைபெற்றபேச்சுக்களின் போது எடுக்கப்பட்டபடம்.
அரசு தரப்புப் பிரதிநிதிகளான திருவாளர்கள் நவீன் குணரத்தின, பாலபத்த பெண்டி, லயனல் பெர்னாண்டோ, ராஜன் ஆசீர்வாதம் ஆகியோரும்-
புலிகள் தரப்புப் பிரதிநிதிகளான திருவாளர்கள் கே. கரிகாலன், சி. இளம்பரிதி, சு. டொமினிக், ஆ. ரவி ஆகியோரும் — படத்தில் காணப்படுகின்றனர்.
படங்கள்:
ராஜ்குமார், தவம்.

## நட்புறவுடன் நேற்றைய ஆரம்பப் பேச்சு

# இயல்பு நிலையைக் கொண்டுவரும் அம்சங்களே பிரதானமாகப் பரிசீலனை

## பி.பி.ஸி. செய்தியாளர் ஏமாற்றம்

யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பமான பேச்சுக்கள் தொடர்பான செய்திகளை சேகரிக்க பலாலி வந்த பி.பி.ஸி. கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்ஸி போக்குவரத்து வசதியின்றி பலாலியில் நேற்று தங்கவேண்டி ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் வந்த ஹெலியிலும், பருத்தித்துறைக்கு வந்த கப்பலிலும் வர இவர் முயற்சித்தபோதிலும், இவர் வந்த விமானம் தாமதமாக பலாலிக்கு வந்து சேர்ந்ததால் இவர் நேற்று யாழ்ப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் ஹெலிக்கொப்டரை சுற்றி வளைத்து நின்றனர்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் விமானப் படையின் ஹெலிக்கொப்டர் வந்திறங்குவதற்காக விசேடமாக 'ஹெலிபாட்' அமைக்கப்பட்டிருந்தது.

காற்றின் திசையைக் காட்டும் ஒரேஞ் நிறக்கொடி அங்கு கட்டப்பட்டிருந்தது. மக்கள் காலை 7-00 மணியில் இருந்தே பல்கலைக்கழக மைதானத்தில் கூடினர்.

சரியாக காலை 8-45 மணிக்கு விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி பாலசிங்கம், தமிழீழ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முதலில் இறங்கிய லயனல்

ஹெலிக்கொப்டரில் இருந்து வலது பக்கமாக முதலில் திரு.லயனல் பெர்னாண்டோ இறங்கினார். பின்னர் இடது பக்கமாக அரசுத் தூதுக்குழுவின் ஏனைய உறுப்பினர்களான பிரதமரின் செயலாளர் திரு. பாலபத்தபெண்டி, திரு. ராஜன் ஆசீர்வாதம் திரு. நவின் குணரத்னா ஆகியோர் இறங்கினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் முதலில் திரு. லயனல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 5 நிமிடங்களில் ஹெலி புறப்பட்டுச் சென்றது

அரசுப்பிரதிநிதிகளை இறக்கிய பின்னர் ஹெலிகொப்டர் காலை 9-05 மணிக்கு யாழ் பல்கலைக்கழக''ஹெலிபாட்''டில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

அதற்கு முன்னர் மக்கள் ஹெலியை சுற்றி வளைத்துக் கொண்டனர். சிலர் ''ஹெலி''யின் கதவுகளை இழுத்துப் பிடித்தனர்.

''ஹெலி''யில் வந்திருந்த விமானப்படையினர் புன்சிரிப்புடன், மக்களை ஒருவாறு அகற்றி விட்டு ஹெலிக் கொப்டரை பலாலிக்கு எடுத்துச் சென்றனர்.

ஹெலிக்கொப்டர் மேலே எழும்பும் போது மக்கள் ஆரவாரஞ் செய்து விமான படை அதிகாரிகளுக்கு கையசைத்து வழி அனுப்பினர். (எ4-3--9)

## இன்று கூட்டறிக்கை வரும்


யாழ்ப்பாணம், ஒக்டோபர் 14

வடபகுதி மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு மீளக் கொண்டுவருவது சம்பந்தமான நடவடிக்கைகள் குறித்தே, நேற்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளும், அரசாங்கப் பிரதிநிதிகளும் நடத்திய பூர்வாங்க சமாதானப் பேச்சுவார்த்தையின் போது பிரதான மாகப் பரிசீலனை செய்யப்பட்டன.

✶ வடபகுதியின் உணவுப் பிரச்சினை ★ அத்தியாவசிய பாவனைப் பொருள்களைத் தடங்கலின்றிக் கொண்டுவருதல் ✶ மின்சார விநியோகம் ✶ ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், வீதிகளைப் புனரமைத்தல் ✶ தாண்டிக்குளத்தில் பயணிகளின் கஷ்டங்களை நீக்குதல் ✶ ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்களையும், பாடசாலைகளுக்கு ஆசிரியர்களையும் நியமிப்பது உட்பட மற்றும் பல அன்றாடப் பிரச்சினைகள் நேற்று நடைபெற்ற இரண்டு சுற்றுப் பேச்சுக்களின் போதும் ஆராயப்பட்டன. நேற்றைய பேச்சுக்கள் மிகவும் நட்புறவான, சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், சுண்டிக்குளியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் உள்ள விசேட மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை 9-40 மணிக்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையே முதற் சுற்றுப் பேச்சு ஆரம்பமானது.

(6 ஆம் பக்கம் பார்க்க)



யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்துக்கு முன்பாக, விமானப்படை ஹெலி அங்குள்ள மைதானத்தில் இறங்கும்போது எடுக்கப்பட்ட படம்.

# யுத்த நிறுத்தம் பற்றி இன்று ஆராயப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 14

யுத்த நிறுத்தத்துக்கு வழி செய்யும் வகையில் பகைமையை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து விடுதலைப் புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையிலான இன்றைய பேச்சுக்களில் ஆராயப்பட உள்ளது.

இன்று நடக்கும் பேச்சுக்களின் போது ஆராயப்படவிருக்கும் ஏனைய விடயங்கள் வருமாறு:-

★ வடபகுதி மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை.
★ கடல்வலயத் தடைச் சட்டம்.
★ அகதிகள் எதிர்நோக்கும் பிரச்சினை.
★ தீக்கிரையாக்கப்பட்ட யாழ். பொது நூலகம்.

## கோட்டைப் பகுதியில் அரச பிரதிநிதிகள்!

### சேதங்களைப் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணம் வந்துள்ள அரச பிரதிநிதிகள் சேதமடைந்த நிலையில் காட்சியளிக்கும் யாழ். பொது நூலகத்தை நேற்று மாலை பார்வையிட்டனர்.

கோட்டைப் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த வீரசிங்கம் மண்டபம் மற்றும் கட்டடங்களையும் அவர்கள் பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் 1974 இல் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் நடந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒன்பது பேரின் நினைவாக கோட்டைப் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவுக் கல்லையும் அவர்கள் பார்வையிட்டனர். (இ-3)

## வெளிநாட்டு, உள்நாட்டு செய்தியாளர் படை எடுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

வெளிநாட்டு, உள்நாட்டு செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த 22 செய்தியாளர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நேற்று முன்தினம் விமான மூலம் பலாலி வந்திருந்த இவர்கள் அங்கிருந்து 'கோமாரி' கப்பலில் நேற்று நண்பகல் அளவில் பருத்தித் துறைக்கு வந்து சேர்ந்தனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும், அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஆரம்பமான பேச்சுவார்த்தை தொடர்பான செய்திகளை ... நேற்று ... சேர்ந்தனர்.

இன்று மாலை அவர்கள் பருத்தித்துறையில் இருந்து கப்பல் மூலம் கொழும்பு திரும்புவர். (இ-3)

## அரச தரப்பு இன்று புறப்பாடு

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த நேற்று யாழ்ப்பாணம் வந்த அரச குழுப் பிரதிநிதிகள் இன்றுகொழும்பு திரும்புகின்றனர்.

இவர்களை அழைத்துச் செல்ல இன்று பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்துக்கு முன்பாக உள்ள திறந்த வெளியில் ஹெலிக் கொப்டர் வந்திறங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## நகரில் விடுதலைப்புலிகள் கடும் பாதுகாப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணம் வந்துள்ள அரச பிரதிநிதிகளுக்கு நேற்று விடுதலைப்புலிகளின் விசேட கொமாண்டோ படையணி பாதுகாப்பை வழங்கியது.

அரச பிரதிநிதிகள் சென்ற பகுதிகளில் எல்லாம் நவீன ஆயுதம் தரித்த போராளிகள் பாதுகாப்பை வழங்கினர்.

பிரதிநிதிகள் தங்கியிருந்த சுபாஷ் ஹோட்டல் பகுதியிலும் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வீதிப் போக்குவரத்துப் பணியில் ஏராளமான காவல் துறையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். [இ-3]



அரசாங்கப் பிரதிநிதிகளான (இடமிருந்து) ராஜன் ஆசீர்வாதம், லயனல் பெர்னாண்டோ, நவின் குணரத்னா, பாலபத்தபெண்டி, ஆகியோர் ... பல்கலைக்கழக மைதானத்தில் ஹெலியில் இருந்து இறங்கிய பின் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
மாபெரும்
**உதைபந்தாட்டம்**
**1 ஆம், 2 ஆம், 3 ஆம் பிரிவுகள்**

காலம்
**14 - 10 - 94** பி.ப. 2 மணி யா/ புனித சம்பத்திரிசியார் கல்லூரி எதிர் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
**17 - 10 - 94** பி.ப. 2 மணி யா/புனித பரியோவான் கல்லூரி எதிர் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
**20 - 10 - 94** பி.ப. 2 மணி யா/ மகாஜனக் கல்லூரி எதிர் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

இடம்: ஸ்கந்தா மைதானம்
ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
அதிபர்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி. (33339)

**மெதடிஸ்த**
**பெண்கள் / ஆண்கள் இல்லம்**
யாழ்ப்பாணம்.

மேற்படி இல்லத்தில் சேர விரும்பும் பின்வரும் தகைமைகள் கொண்ட பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:
1. தாய் / தகப்பன் அல்லது இருவரையும் இழந்த பிள்ளைகள்.
2. 8 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள்.
3. கிராம சேவகரின் சிதப்பவுரை.

இல. 570, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த சி. எல். எஸ். புத்தகசாலையில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்

— முகாமைக் குரு.
[சி–9505]

**உடன் தேவை**

(1) பயிற்றப்பட்ட பெண் தாதிகளும் பயிலுநர் தாதிகளும்
(2) பயிற்றப்பட்ட பெண் மருந்து விற்பனையாளர்கள்.

—நிர்வாகி.
**சம்பந்தர்**
**மொடேர்ன் வைத்திய நிலையம்**
யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்,
சாந்தி தியேட்டர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (33337)

**விக்னா** கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 94** பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு
மீட்டல் **Sat, Sun. Classes**
**ஆரம்பம்: 16 - 10 - 94**

நேர அட்டவணை

| | |
|---|---|
| 7-00, 8-00 | புவியியல்/அரசியல் |
| 8-00, 9-00 | இந்துநாகரிகம் |
| 9-00, 10-00 | அளவையியல் |
| 10-00, 11-00 | பொருளியல் |
| 11-00, 12-00 | வர்த்தகம் |
| 12 00, 1-00 | தமிழ் / கணக்கியல் |

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் போதிக்கப்படுகின்றது.
பகல் நேர வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன
(சி/9507)

**DIPLOMA IN**
**COMPUTER PROGRAMMING**
**BASIC LANGUAGE**
**4 MONTHS**
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
**ஆரம்பம்: 23 - 10 - 1994**
8-30 மணி

**Lectures by;**
S. P. Sivapathasundaram
M. I. D. P. M. (London)

★ கட்டணம் தவணை முறையில் மாதம் ரூபா **400**/- மட்டுமே.
★ BASICகற்கும் மாணவர்களுக்கு Lotus, Word Star பாடநெறிகளுக்கான கட்டணங்களில் சலுகை.
★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்.
★ கூடிய செய்முறைப் பயிற்சி.
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ Short - Hand & Typing. BASIC English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.
(சி/9330)

# இராணுவத் தீர்வைக் காணும் கொள்கைக்கு பத்தாண்டு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு விட்டது

## அறிவுள்ள எவரும் யுத்தத் தீர்வை நாடமாட்டார்

''சமாதானம் — இன்றைய தேவை'' என்ற தலைப்பில் ஓய்வுபெற்ற இராணுவ பிரிகேடியர் நாரத விக்கிரமரத்ன எழுதி, 'சண்டே ஐலண்ட்'டில் வெளியான கட்டுரையில் இருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

யுத்தம் ஒன்றை நடத்த வேண்டும் என்றால் தரையில் உள்ள படையினரும் தளபதிகளும் இராணுவ மற்றும் அரசியல் நோக்கங்கள் பற்றி தெளிவாக தெரிந்திருக்க வேண்டும். இது தான் தர்க்க ரீதியான முடிவாகும்.

கடந்த பத்து ஆண்டுகளாக இராணுவ நோக்கங்கள் எவை என்பது பற்றி படையினருக்கும் தளபதிகளுக்கும் தெரியும், ஆனால் அரசியல் நோக்கங்கள் எவை என்பது பற்றி தளபதிகளுக்கும் படையினருக்கும் ஒன்றுமே தெரியாது. அரசியல் தலைவர்களின் அகம்பாவத்துக்கு ஏற்ப அரசியல் நோக்கங்களில் மாற்றங்கள் ஏற்படுவதே இதற்குரிய காரணமாகும்.

பத்தாண்டுகளாக நடந்தது என்ன? பிரச்சினை சர்வதேசமயப்படுத்தப்பட்டது. சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு இந்திய அமைதிப்படை அழைக்கப்பட்டது. இலங்கைப் படையினராலோ அல்லது இந்திய அமைதிப் படையினராலோ அமைதியைக் கொண்டு வர முடிந்ததா? இல்லை. எவ்வளவு கஷ்டமானதாக இருந்தாலும் உண்மை நிலை ஒன்றை நாம் ஏற்க வேண்டும். ''யுத்தத்தில் எவரும் வெற்றி பெறுவதில்லை. எல்லாரும் தோல்வி காணுபவர்களே'' — இந்த உண்மை நிலையை ஏற்பதன் மூலமே எதிர்காலக் கொள்கையை உருவாக்கலாம்.

பத்தாண்டுகளிலே முதல் தடவையாக மத்திய அரசாங்கம் ஒன்று சமாதானம் பற்றி பேச ஆரம்பித்துள்ளது.

சமாதானம் ஏற்பட வேண்டும் என்பது குறித்து கருத்துடன்பாடு ஒன்று இப்போது முதல் தடவையாக நாட்டில் ஏற்பட்டுள்ளது. இக்கருத்துடன்பாட்டுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படக் கூடாதா?

இராணுவத் தீர்வு காணும் கொள்கைக்கு கடந்த பத்தாண்டுகளாக சந்தர்ப்பம் ஒன்றைக் கொடுத்து வந்தோம். அதில் வெற்றி பெற்றோமா? இல்லை.

அறிவுள்ள எவரும் இராணுவத் தீர்வை நாட மாட்டார்கள்; அதனால் ஏற்படும் உயிரிழப்புகளுக்காக அல்ல.

கடந்த பத்தாண்டுகளாக யுத்தத்தில் இராணுவத்துக்கு ஏற்பட்ட பேரழிவுகளுக்கு யார் கணக்குக் காட்டுவது? இராணுவத்தில் எந்த உயர் அதிகாரியும் படையினர் சந்தித்த பேரழிவுகளுக்கு பொறுப்பேற்கவில்லை.

மணலாறு, பூநகரி, கிளாலி ஆகிய இடங்களில் இராணுவத்தினர் சந்தித்த பேரழிவுகளுக்கு யார் பொறுப்பு? இதனால் தான் இலங்கை இராணுவத்தினர்தான் தங்களுக்கு மிகப்பெரிய ஆயுத விநியோகத்தர்கள் என்று விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் பயமின்றி கூறுகின்றார்.

முன்னாள் அரசாங்கம் தான் அந்த ஆயுத விநியோகஸ்தராக இருந்தது என்பதை கவலையுடன் தெரிவிக்க வேண்டியுள்ளது. இழப்புக்களுக்குப் பொறுப்பேற்க முன்வராத நிலையில் தொழில்சார் திறமை பற்றி பேசுவதில் அர்த்தம் எதுவும் இல்லை.

இந்திய அமைதிப்படை 1987 இல் யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டபோது ஒரு கட்டத்தில் யாழ். பல்கலைக் கழக வளாகத்தில் பராதுருப்புகளை ஹெலிக்கொப்டர் மூலம் இறக்கியது. அது இந்திய இராணுவத்துக்கு பேரழிவாக முடிவடைந்தது. இது குறித்து என்ன நடந்தது?

பரா துருப்புக்களை யாழ். பல்கலைக் கழக வளாகத்தில் ஹெலி மூலம் இறக்குவதற்கு உத்தரவிட்டவர் இந்திய இராணுவத்தின் மேஜர் ஜெனரல் ஒருவர் ஆவார். பஞ்சாப் பொற்கோயில் மீது மேற்கொள்ளப்பட்ட 'ஒபரேஷன் புளூஸ்டார்' இராணுவ நடவடிக்கைக்காக அவர் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

ஆனால் யாழ். பல்கலைக் கழக வளாக இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட பேரழிவுக்காக அந்த மேஜர் ஜெனரல் மீது இந்திய இராணுவம் நடவடிக்கை எடுத்தது. 25 ஆண்டுகால இராணுவ சேவையாற்றிய அந்த மேஜர் ஜெனரலை புதுடில்லி திருப்பி அழைத்தது. அவர் உயர்நிலை விசாரணை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டார். முடிவில் அவர் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார்.

இந்த நிலை இலங்கையில் உண்டா? கொழும்பில் இருந்து கொண்டு இராணுவத் தீர்வுக்கு உத்தரவிடுவது இலகுவானது.

வியட்நாம் யுத்தத்தில் 37 ஆயிரம் படையினரை இழந்த பின்னரே இராணுவத் தீர்வு பிரயோசனமற்றது என்பதை அமெரிக்க அரசு உணர்ந்தது. இவ்வளவு உயிரிழப்பை இலங்கையால் பொறுத்துக் கொள்ள முடியாது; நாடும் இதனை ஏற்றுக் கொள்ளாது.

இந்த யுத்தத்தை நடத்த வேண்டும் என்று விரும்புபவர்கள் யார்?

ஆயுத விநியோகஸ்தர்கள், இப் பிரச்சினையை வைத்து அரசியல் நடத்தும் ஊழல் அரசியல்வாதிகள், சலுகைகளை நாடும் சிறு எண்ணிக்கையிலான படை அதிகாரிகள் ஆகியோரே அவர்கள்.

இராணுவத்துக்கு ஏற்பட்டு வந்த ஒவ்வொரு பேரழிவும் வீழ்ச்சியும் இவர்கள் தங்கள் பிழைப்பை நடத்தவே உதவின.

★

## முத்தமிழ் விழா

குருநகர், ஒக். 14

கொழும்புத்துறை சென். யோசப் வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு முத்தமிழ்விழா நடைபெறுகிறது.

அதிபர் திரு. பி. பெனடிற் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட் திரு. ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-51)

## குறள் வாழ்வின் நெறிகளை எடுத்துக் கூறும் படைப்பு

### திருவள்ளுவர் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஒக். 14

''பல மொழிகள் உள்ள உலகில் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்பைக் கொண்டு திருக்குறள் மூன்றாவது இடத்தில் உள்ளது. இது தமிழர்க்குப் பெருமை ஆகும். திருக்குறள் வாழ்வின் நெறிகளை எடுத்துக் கூறும் அரிய படைப்பாகும்''

உரும்பிராயில் அண்மையில் நடைபெற்ற தமிழீழத் திருவள்ளுவர் மன்றத்தின் வள்ளுவர் விழா இறுதி நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசும்போது கூறியதாவது;

பாரம் பரிய தமிழ் நாட்டுச் சிந்தனையுடன் சமணம், பௌத்த மதங்களில் உள்ள சிறந்த கருத்துகளையும் இணைத்து உலகம் போற்றும் உயரிய நூலை வள்ளுவர் தந்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

மன்றம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி வழங்கினார்.

இவ் விழாவின் மூன்றாம் நாள் காலை நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. சி. சிவலிங்கராஜா தலைமை வகித்தார். (க-111)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, ஒக். 14

கொடிகாமம் அரசினர் வித்தியாலய வருடாந்த பரிசில் நாள் விழா நாளை சனிக்கிழமை நடைபெறும். (இ-117)

**விற்பனைக்கு**

★ கேர் (F)போம் பிறசியர்ஸ்
★ சில்வர் சில்ட் சொக்ஸ்வகைகள்,
★ பெனியன்கள்
★ நூல்,
★ எலாஸ்டிக் வகைகள்
★ யட்டிகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**சிறிமுருகன்**
303, காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம். (33333)

## தவறிவிட்டது

**12—10—1994** அன்று இரவு யாழ்ப்பாணம் செல்வதற்காக கிளாலி பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்த போது எனது பிரயாணப்பையில் வைத்திருந்த ஒரு தொகைப்பணம், டிறாப்ற், தேசிய அடையாள அட்டை (இல. 340091353 V) மற்றும் முக்கிய ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க. கந்தையா, 11/1, அலெக்ஸ் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற எமது முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(33340)

## விஜயதசமி விழாவும் வித்தியாரம்பமும்

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை சைவப் பணிமனையில் இன்று (14-10-1994) காலை 6.00 மணிக்கு கலைகளுக்கான, பாலர்களுக்கான வித்தியாரம்பம் நடைபெறும்.

| | |
|---|---|
| சங்கீதம்: | திரு. மா. ஸ்ரீரங்கநாதன் |
| பண்ணிசை: | வி'. சிவஞானசேகரம் |
| வயலின்: | திரு. உ. இராதாகிருஷ்ணன், செல்வி து. குகரஞ்சனி |
| மிருதங்கம்: | திரு. க.ப. சின்னராசா |
| நடனம்: | செல்வி ஞானசுந்தரி திருஞானசம்பந்தபிள்ளை |
| ஆர்மோனியம்: | திரு. மா. ஸ்ரீரங்கநாதன் |
| சித்திரம்: | திரு. S. வரதராஜா |
| சைவசமயம்: | திருமதி ப. சந்திரசேகரம் |

மாலை பரிசளிப்பு வைபவமும், கலைநிகழ்ச்சிகளும், பக்தநந்தனார் என்னும் புராண இசைநாடகமும் இடம்பெறும்.

இணுவில்.

**C. C. A.**
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

மீண்டும்
ஒரு புதிய பிரிவு
பொருளியல்
**A/L 94** பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான
வினா விடை வகுப்பு
சனி, ஞாயிறு
மாலை 5 மணி

ஆசிரியர்:
**K. உதயன்**
B. B. A. (Spl)

ஆரம்பம்:
**16 — 10 — 1994**

குறிப்பு;
1980ஆம் ஆண்டு முதல் அலகு ரீதியான வினாக்கள் மீட்கப்படும்.
(சி 9509)

## மரண அறிவித்தல்கள்

### நடராசா இரட்ணானந்தன்

மயிலணி, சுன்னாகத்தைச் சேர்ந்த நடராசா இரட்ணானந்தன் நேற்று அகாலமரணமானார்.

அன்னார் நவனீதமணியின் (ஸ்ரீலங்கா ரெலிக்கொம் யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், அருட்குகன், இந்துசா, பேரானந்தரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்றவர்களாகிய நடராஜா-சிவபாக்கியம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும், ஈஸ்வரானந்தன், விபுலானந்தன், யோகானந்தன், காலஞ்சென்ற சதானந்தன், திருமதி பாலசுப்பிரமணியம் சகுந்தலா ஆகியோரின் சகோதரரும், ஜானகியம்மா, கந்தசாமி, சண்முகரட்ணம் காலஞ்சென்ற ஞானாம்பிகை, பரமேஸ்வரன், சண்முகதாசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை, மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
நவனீதமணி
(மனைவி)
மயிலணி,
சுன்னாகம். (33342)

### கு. திருச்சிற்றம்பலம்

சாவகச்சேரி அறவாணன் வீதியைச் (மடத்தடி) சேர்ந்த கு. திருச்சிற்றம்பலம் [ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர், வவுனியா) அவர்கள் நேற்று (13-10-1994) இயற்கையெய்தினார்.

இவர் காலஞ்சென்ற குழந்தைவேலுப்பிள்ளை — விசாலாட்சி தம்பதிகளின் அன்புமகனும், திருமதி இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி) அவர்களின் அன்புக்கணவரும், திருமகள், கதிர்மகள், (ஆசிரியை), பரந்தாமன் (பொறி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சிறீகாந்திமதி சேதுகாவலர் (குருமன்காடு, வவுனியா) அவர்களின் அன்புசகோதரனும், திருமதி புவனேஸ்வரி தியாகராஜா (வவுனியா), காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி விநாயகமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், பரமசாமி சந்திரநாதன் அவர்களின் மாமனாரும், டாக்டர் கு. தியாகராஜா அவர்களின் சகலனும், காயத்திரி, ஜொனதன் ஆகியோரின் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று (14-10-1994) வெள்ளி காலை 10-00 மணிக்கு சாவகச்சேரி அறவாணன் வீதியில் (மடத்தடி) உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று. தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
டாக்டர் கு. தியாகராஜா
அரசினர் வைத்தியசாலை,
வவுனியா. (33338)

### V.K. நடராஜா (சிங்கப்பூர்)

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வேதவனம் கந்தையா (மலாயன் பென்சனியர்), லக்ஷ்மி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரன் V.K. நடராஜா (மலாயன் பென்சனியர்) சிங்கப்பூரில் 10.10.94 அன்று காலமானார்.

இவர் அரியாலையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியை லக்ஷ்மி (சிங்கப்பூர்) அவர்களின் அன்புக் கணவரும், சுபாங்கினியின் அருமைத் தந்தையாரும், மயில்வாகனம் சுகுமாரின் அன்பு மாமனாரும், மனோன்மணி சண்முகம், காலஞ்சென்ற V.K. தியாகராஜா (மலேசியா), V.K. நாகராஜா (முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர், வவுனியா), வடிவாம்பிகை தங்கராஜா, V.K. தர்மராஜா (பிரதி அதிபர், வித்தியானந்த கல்லூரி முள்ளியவளை), கனகராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.10.94 அன்று சிங்கப்பூரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனோன்மணி சண்முகம்
வடிவாம்பிகை தங்கராஜா
24, பொற்பதி வீதி,
கொக்குவில். [33343]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு ஆரம்ப விழா சிறப்புமலர்
## வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, சித்தன்கேணி
(1894 - 1994)

14-10-1994

## நல்லை முதல்வர் ஆசி

அருளோங்கும் சைவமெய்யன்பர்களே, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியினது நூற்றாண்டு விழா நடைபெறவுள்ளதறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம். இன்னல்களும் இடர்களும் நிறைந்த இக்கால கட்டத்திலும், மனத்தளர்வின்றி இக்கல்லூரியைப் பரிபாலிக்கும்அன்பர்கள் இடைநிறுத்தம் இல்லாமல் இத்துணைகாலமும் செயலாற்றிவருவது ஒரு சாதனை எனலாம். இது பாராட்டுக்குரியது. உண்மையில் அதிபரினதும், ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் ஆக்கமும் ஊக்கமும் உறுதுணை அளிப்பன. அவ்வேளை இக்கல்லூரியின் ஸ்தாபகரான சைவப் பெரியார் அமரர் அம்பலவாண நாவலர் அவர்களை நினைவுகூர்ந்து போற்றுவது சாலச்சிறந்த நன்றிமறவாக் கடனாகும். சைவத்துக்கும் நற்றமிழுக்கும் நற்பணியாற்றும் இக்கல்லூரி அன்பர்களின் தொண்டுகள் மேன்மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளை உளமார வேண்டி இவ்விழா சிறப்புற நிறைவுறப் பணிபுரியும் அன்பர்களைப் பாராட்டி எல்லோருக்கும் எமது மனப்பூர்வமான நல்லாசிகளை வழங்குகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## கல்விப்பணி சிறக்குக

யாழ் வட்டு இந்துக்கல்லூரி தனது நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் இம்மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மிகவும் பெருமையடைகிறேன்.

இக்கல்லூரி 1894 இல் திரு. அம்பலவாண நாவலர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அந்நியராட்சி நிலவிய காலங்களில் தமிழையும் சைவத்தையும் பேணிக் காப்பதன் பொருட்டு இக்கல்லூரியை ஆரம்பித்துள்ளார்.

இக்கல்லூரி தழைத்து வளர்ந்து இன்று பெருவிருட்சமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. எத்தனையோ அறிஞர்களை உருவாக்கிய இக்கல்லூரி அண்மையில் ஜனாதிபதி விருது பெறக்கூடியதாக மாணவர்களுக்கு கல்விப்பணி ஆற்றியுள்ளது பெருமைப்படக்கூடிய ஒரு விடயமாகும். அந்த வகையில் இக்கல்லூரி வளர்ந்துவிட்டதென்றால் அதற்கு இக்கல்லூரியின் அதிபரும், ஆசிரியர்களும் அவர்களோடு ஒத்துழைக்கும் மாணவர்களுமே காரணகர்த்தாக்கள் ஆவர்.

அண்மைக்காலமாக இக்கல்லூரி கல்வி வளர்ச்சியிலும் மற்றும் துறைகளிலும் துரிதமாக வளர்ந்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது பல மாணவர்கள் கல்வி பயின்று பல்கலைக்கழகம் சென்று அறிஞர்களாக வெளியேறி உள்ளமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

எமது வலிமேற்குப் பகுதியில் சிறந்த பாடசாலையாக விளங்கும் இப்பாடசாலை இப்பகுதியின் கல்வி வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டுவருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எம்மக்கள் எத்தனையோ துயரங்களுக்கு மத்தியிலும், இக்கல்லூரி தனது நூற்றாண்டுவிழாவை கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். மேலும் இக்கல்லூரியின் பணிசிறந்து விளங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**கா. சந்திரராசா.**
பிரதேச செயலாளர் / மேலதிக அ. அதிபர்,
வலிகாமம் மேற்கு, சங்கானை

## சாதனைகள் கண்ட கல்லூரி

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி தனது நூற்றாண்டு விழாவை வெகு கோலாகலமாகக் கொண்டாடுவது குறித்து பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் எமது வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சித்தன்கேணியைச் சேர்ந்த அம்பலவாண நாவலரால் ஸ்தாபிக்கப்பட்ட இக்கல்லூரி ஆரம்பகாலம் முதல் இன்றுவரை கல்வித்துறையிலே, கலைத்துறையிலே, சமயத்துறையிலே, விளையாட்டுத்துறையிலே பல சாதனைகளை நிலை நாட்டி இன்று நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது. நீடூழி வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

சித்தன்கேணியைச் சேர்ந்த முதலியார் திரு. ச. குமாரசுவாமி அவர்களும் அராலியைச் சேர்ந்த இராசசுந்தரம் அவர்களும் இக்கல்லூரியின் கட்டட வசதியை நிறைவேற்றும்வகையில் கட்டடங்களை அமைத்துத் தந்து கல்லூரி முன்னேற உதவியுள்ளனர். இத்தருணத்தில் அவர்களையும் நினைவு கூர்ந்து இக் கல்லூரி ஒரு தேசியப் பாடசாலையாக உயர்வுபெற சகலரும் முயற்சி எடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இக்கல்லூரி சகல துறைகளிலும் வளர்ச்சியடைய உதவிவரும் அதிபர், ஆசிரியர்களும் சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

**நா. க. தங்கரத்தினம்**
தலைவர்
பழைய மாணவர் சங்கம், வட்டு இந்துக்கல்லூரி.

### யா. வட்டு. இந்துக்கல்லூரி
சித்தன்கேணி
## நூற்றாண்டு ஆரம்ப விழா

இடம்: யா/வட்டு. இந்துக்கல்லூரி, சித்தன்கேணி
காலம்: **14-10-1994** வெள்ளி
முற்பகல் 10 மணி

தலைவர்:
கல்லூரி அதிபர் திரு. நா. ஜெயநாயகம் அவர்கள்

முதன்மை விருந்தினர்:
திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள்
(சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர்)

சிறப்பு விருந்தினர்கள்:
திருமதி அ. வேதநாயகம் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், கணிதம்)
திரு. ந. மதி
(சங்கானை வட்டவைப் பொறுப்பாளர்)

நிறுவுனர் நினைவுப் பேருரை;
பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் அவர்கள்
(தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி திரு. ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள்
(தலைவர், இந்துநாகரிகத்துறை யாழ். பல்கலைக் கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
— நூற்றாண்டு விழாக் குழுவினர்.

## சைவத் தமிழ்ப் பண்பாடு வழுவாத சமுதாயத்தை கட்டி எழுப்பிய கல்லூரி

''கல்விக் கூடங்கள் கல்வியை மட்டும் ஊட்டுபவை அல்ல; ஒரு சமுதாயத்தின் பண்பாட்டு கலைப் பொக்கிஷங்களைப் பாதுகாக்கும் நிலையங்களுமாகும்''

— பிளேட்டோ —

இக்கல்லூரி தன் ஒரு நூற்றாண்டுகால கல்விச் சேவையைச் சிறப்புற நிறைவேற்றியுள்ளது. இது தன் நூற்றாண்டு விழாவை 14-10-94 ஆகிய இன்று கொண்டாடுகிறது. இக்கல்லூரியில் ஆயிரத்து இருநூறு மாணவர்களும் ஐம்பத்தேழு ஆசிரியர்களும் உள்ளனர். இதன் அதிபரான திரு. நா.



கல்லூரியின் நிறுவுனர் அம்பலவாண நாவலா

ஜெயநாயகம் அவர்கள் கல்லூரியை நன்கு பேணி வளர்த்து வருகின்றார்.

கல்வியும் கலைகளும் வளர்த்த இக்கல்லூரியின் வரலாறு நூற்றாண்டு காலச் சம்பவங்களைக் கொண்டது. சிறந்த முகாமையாளர், கொடைவள்ளல்கள், புகழ்மிக்க அதிபர்கள், தன்னலமற்ற ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவ சங்கத்தினர் எனப் பலர் இக்கல்லூரியை வளர்த்தனர்.

**நிறுவுநர் அம்பலவாண நாவலர் (1855-1932)**

இவர் ஆறுமுகநாவலரின் சீடராவர். மதுரைத் திருஞானசம்பந்த சந்நிதானத்தில் காவியேற்று துறவு பூண்டவர். பேரறிஞரான இவருக்கு திருவாவடுறை ஆதீனம் 'நாவலர்' என்ற பட்டத்தைக் கொடுத்துக் கௌரவித்தது. தம் குருவான ஆறுமுக நாவலரைப் பின்பற்றி இவரும் பாடசாலை அமைக்கும் தொண்டில் ஈடுபட்டார்.

இதன் பிரகாரம் தமக்குச் சொந்தமான காணியுடன் தமது உறவினரான மு. துரைராசா என்பவரது காணியையும் பெற்று இக்கல்லூரியை அமைக்கும் பணியை மேற்கொண்டார். இதற்கான அத்திவாரத்தை 1894 ஆம் ஆண்டு விஜயதசமித் தினத்தன்று நாட்டினார்.

**முகாமையாளர் நொத்தாரிசு சிதம்பரநாத பிள்ளை**

இவர் அம்பலவாணநாவலருடன் சேர்ந்து பாடசாலையை உருவாக்கி வளர்த்தவர். சேர். பொன். அருணாசலத்துடன் உத்தியோக ரீதியான தொடர்புகொண்டவர். இத்தொடர்பினால் பாடசாலை வளர்ச்சிக்கு வேண்டிய சகல உதவிகளும் கிடைத்தது. இவர் காலத்தெழுந்த கட்டடங்கள் இன்றும் பாடசாலையில் காணப்படுகின்றன.

**சின்னத்துரைச் சட்டம்பியார் (1900-1920)**

இவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றுத்தேறியவர். எம். ஏ. பட்டம்பெற்ற இவர், இக்கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினார். லண்டன் ஜூனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சையிலும், இலங்கை ஈ. எஸ். எல். சி. பரீட்சையிலும் மாணவர்களைச் சிறந்த பெறுபேறுகளைப் பெற வைத்தார். இவரது திறமையால் இக்கல்லூரி சின்னத்துரைச் சட்டம்பியார் பாடசாலை எனவும் அழைக்கப்பட்டது. கல்லூரியும் சைவ ஆங்கில வித்தியாசாலை என்ற தரத்தை அடைந்தது.

**நவாலியூர் சோமசுந்தரப்புலவரும் கல்லூரியும் (1920இன் பின்)**

'தங்கத்தாத்தா' என அழைக்கப்பட்ட புலவரவர்கள் இக்கல்லூரியின் தமிழ் ஆசானாக அமர்ந்து இலக்கண இலக்கியங்களைச் சிறப்புறக் கற்பித்தார். நாடகத்துறையிலும் மாணவர்களை முன்னேற்றினார். சின்னத்துரைச் சட்டம்பியாரின் பின் மூளாயைச் சேர்ந்த மயில்வாகனம் என்பவர் இக்கல்லூரியின் அதிபராக இருந்து ஆங்கிலமும் கற்பித்தார்.

இவற்றோடு நாவலரின் சைவசமய வகுப்புகளும் இணைந்து நடைபெற்றன. இம்முயற்சிகளால் கற்பதற்காக மாணவர் எண்ணிக்கையும் அதிகரித்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

**திருமதி ஞானாம்பிகை முத்துலிங்கம்,**
B. A. (Cey.), Dip-in-Edu,
(கல்லூரியின் பழைய மாணவியும், ஆசிரியையும்)

## பல்துறை நிபுணர்களை புறந்தந்து ஓங்கி நிற்கும் இந்துக் கல்விக்கூடம்

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நூற்றாண்டு விழாவை இவ்வருடம் கொண்டாடுவது பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. நூற்றாண்டு விழா ஆண்டில் அதன் அதிபராகக் கடமையாற்றக் கிடைத்த பேறு பெரும் பேறெனக் கருதுகின்றேன்.

நாவலர் பெருமான் சைவப் பிள்ளைகள் சைவச் சூழலில் கல்விகற்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சைவப் பாடசாலைகளை ஆரம்பித்தார். அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அவரைச் சற்குருவாக வரித்துக் கொண்டவரும் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான அம்பலவாண நாவலர் அவர்களால் 1894இல் வட்டுக்கோட்டையில் ஒரு பாடசாலை நிறுவப்பட்டது. அதுவே பின்னர் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி எனப் பெருவளர்ச்சி கண்டது.

அம்பலவாண நாவலர் நிறுவிய இப்பாடசாலையின் முகாமையாளராக நொத்தாரிசு சிதம்பரநாத பிள்ளை பணிபுரிந்தார். இவரது முயற்சியால் பாடசாலையில் பகுதிநேர ஆங்கில வகுப்புகள் நடத்தப்பட்டு மாணவர்கள் 'ஜூனியர் கேம்பிரிட்ஜ்' பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தப்பட்டனர். பாடசாலையின் ஆரம்பகால வளர்ச்சிக்கு முழுநேர ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்த சின்னத்துரைச் சட்டம்பியார் பெரும் பங்காற்றினார். 1929 இல் இப்பாடசாலையின் முகாமைத்துவப் பொறுப்பை ''இந்துக்கல்லூரிகள் சபை'' ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து இது ''வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி'' எனப் பெயர் பெற்றது.

இந்தியத் தேசபிதா காந்தி மகான் வருகை தந்ததும், தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் ஆசிரியராகப் பணிபுரிந்து சைவமும் தமிழும் கற்பித்ததும இக்கல்லூரி வரலாற்றின் சிறப்பம்சங்களாகும். இக் கல்லூரியைக் கட்டியெழுப்பிய அதிபர்களில் அமரர் திரு. சே. சபாரத்தினசிங்கம், அமரர் திரு. செ. சிவகுருநாதபிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களெனப் பலர் புகழக் கேள்விப்பட்டிருக்கிறேன். கல்லூரிக்கு வள்ளியம்மை மண்டபத்தை அமைத்துத் தந்த கொடைவள்ளல் முதலியார் ச. குமாரசாமியும், விஞ்ஞான ஆய்வுகூடத்தைக் கட்டித்தந்த வள்ளல் திரு. வை. இராசசுந்தரமும் கல்லூரி வரலாற்றில் மறக்கமுடியாதவர்கள்.

இக் கல்லூரி பல கல்விமான்கள், ஆசிரியர்கள், நிருவாகிகள், பொறியியலாளர்கள், சட்ட அறிஞர்கள் எனப் பல்துறைகளில் புகழுடன் விளங்கும் பலரை ஈன்று புறந்தந்து ஓங்கி நிற்கின்றது. 1990 ஆம் ஆண்டு க. பொ. த. (உ. த) பரீட்சையில் ஜனாதிபதி விருதுபெற்ற மாணவன் அ. அற்புதராசா இக் கல்லூரியின் இன்றைய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றான்.

எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவை யொட்டி வெளியிடும் சிறப்புமலரை உளமார வாழ்த்துவதோடு, கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைக்கும் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கக் கோருகின்றேன். எமது கல்லூரி மென்மேலும் சிறந்து விளங்கி அறிவொளி பரப்ப எல்லாம் வல்ல பரம்பொருளை இறைஞ்சுகின்றேன்.

**நா. ஜெயநாயகம்**
அதிபர்
யா/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி,
சித்தன்கேணி

## பெருமைமிகு அறிவாலயம்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி நூறாண்டுகளாக நிலைத்து கல்விப்பணியை ஆற்றிவருவது நமக்குப் பெருமையைத் தருகிறது. எமது கல்லூரிகளில் பல, ஊர்ப் பெரியோர்களால் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் ஊர்ப் பொதுமக்களால் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஊரின் வறுமை— செல்வம், வளர்ச்சி — தேய்வு யாவும் அவ்வூர்ப் பாடசாலைகளில் பிரதிபலிப்பதைக் காணலாம். ஊரின் வாழ்க்கையோடு ஒட்டி வளர்ந்து வருகின்றன இவை. எனவேதான் இவற்றை நாம் எங்கள் அறிவாலயங்களாக மதிக்கிறோம். தேவாலயங்கள் போன்று அல்லது அவற்றிற்கும் மேலாக பாடசாலைகளைப் பேணும் மரபு நம் சமுதாயத்தில் உண்டு.

இப் பாடசாலையில் கல்விகற்று உயர் நிலையில், பெரும்பதவியில், ஒழுங்கான வாழ்வில் இருப்போர் பலர். வட்டுக்கோட்டை மக்களின் கல்வி உயர்ச்சிக்கும், வாழ்வின் வளர்ச்சிக்கும் பெரும் பங்கை இப் பள்ளிக்கூடம் ஆற்றியுள்ளது. இதற்குப் பல சான்றுகளும் உள்ளன.

வட்டு. இந்துக்கல்லூரி நல்ல மாணவரை மட்டுமல்ல, சிறந்த அதிபர்கள், ஆசிரியர்களையும் உருவாக்கியுள்ளது. எங்கள் சமூக மேம்பாட்டிற்காக அயராது உழைத்த ஆசிரியர்கள் பலர் இங்கு வாழ்ந்துள்ளார்கள்.

பெரியோர்கள், பெற்றோர்கள், கல்விமான்கள், கமக்காரர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்து வட்டுக்கோட்டைச் சமூகத்தை உயரவைத்தது வட்டு. இந்துக் கல்லூரி. நம் ஊருக்கு அளப்பரிய தொண்டாற்றி நம் நாட்டை வளம்பெறச் செய்தது இந்தத் தாபனம். இன்று இத்தாபனத்தில் அதிபராக திரு. நா. ஜெயநாயகமும், அவருக்குத் துணையாக திரு. ப. சர்வேஸ்வரஐயர் அவர்களும் பேருக்கத்துடன் தொண்டாற்றி வருகின்றார்கள். இங்கு கடமைபுரியும் 57 ஆசிரியர்களும் அயராது கற்பிக்கிறார்கள். இவர்கள் காலத்தில் இப் பாடசாலை மேலும் வளரும் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு.

வட்டு. இந்துக்கல்லூரி மேலும் நம் வளத்தை மேம்படச் செய்ய வளரவேண்டும், வாழவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**க. கந்தசாமி,**
கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயம் — 02.

## கல்விஒளி பரப்பும் கல்லூரி

சங்கானை கல்விக்கோட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதலில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் யா/வட்டு இந்துக் கல்லூரிக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் யான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இக் கல்லூரியின் சூழலிலே வாழ்கின்ற மக்கள் நிறைந்த தமிழ்ப்பற்றும், சமயப்பற்றும் உள்ளவர்கள். இவ்வாறு சிறந்த நிலையில் மக்கள் வாழ்வதற்கு வழி காட்டியது இக்கல்லூரி.

யாழ்ப்பாணத்திலே சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக ஆறுமுகநாவலர் அவர்கள் பல பெரியார்களின் துணையுடன் பாடசாலைகளை நிறுவினார். சித்தன்கேணியைச் சேர்ந்த அம்பலவாண நாவலர் அவர்கள் ஆறுமுக நாவலரின் வழியில் 1894 ஆம் ஆண்டு விஜயதசமி நாளில் இப்பாடசாலையை ஆரம்பித்தார். இப்பாடசாலை உறுதியாக வளர்ந்து தமது கிராம மக்களுக்கு மட்டுமல்லாது அயற்கிராம மக்களுக்கும் கல்வி ஒளி பரப்பிக்கொண்டிருப்பதை நாம் காண்கிறோம்.

இன்று பாலர் கல்வி முதல் பல்கலைக்கழக புகுமுக கல்விவரை, பாடசாலை விலகியோருக்கான முறைசாராக் கல்வி முதல் ஆசிரியருக்கான தொலைக் கல்விப் பயிற்சிநெறி வரை இக் கல்விக்கூடத்தில் போதிக்கப்படுகிறது.

நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் காலத்தில் கல்விகற்கும் மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர் பெருமைக்குரியவர்கள். இக்காலத்தில் பாடசாலையைப் பல வழிகளிலும் மேலும் சிறப்படையச் செய்து வளர்க்க இவர்களுக்கு ஆண்டவன் திருவருள் கிடைக்க இறைஞ்சுகிறேன்.

நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இப் பழம் பெரும் பாடசாலை மேலும் பல்லாண்டு காலம் வளர்ந்து வாழ்ந்து கல்வி ஒளி பரப்பும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. நூற்றாண்டுவிழாச் சிறப்படைய எனது மனமார்ந்த நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ப. விக்னேஸ்வரன்**
கோட்டக் கல்விப்பணிப்பாளர்.

கோட்டக்கல்வி அலுவலகம்,
சங்கானை.

## கல்வி வளர்த்த நிறுவனம்

நாடெங்கும் கல்விச் சாலைகள் அமைக்கப்பட வேண்டும்; பள்ளிகள் கோயில்களாக்கப்பட வேண்டும். ஒவ்வொருவரும் கல்வி பெற வேண்டும். இந்தக் கனவு 19 ஆம் நூற்றாண்டில் நினைவாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த இலட்சியத்தை முன்னெடுத்துச் சென்றவர் நல்லைமணி ஆறுமுகநாவலர் அவர்கள்.

இதனைத் தொடர்ந்து சமூகத்தில் பெரும் விழிப்புணர்ச்சிபேற்பட்டது யாழ்ப்பாணமெங்கும் கல்விச் சாலைகள் அமைக்கப்பட்டு, இந்துத் தமிழ்ப் பண்பாட்டுடன் இணைந்த கல்விமுறை உருவாக்கி வளர்க்கப்பட்டது. இத் தொண்டை வட்டுக்கோட்டையில் மேற்கொண்டவர் அம்பலவாண நாவலர் அவர்கள் அவரின் பணியின் வெற்றியே இன்றைய வட்டு இந்துக் கல்லூரி. இத் நிறுவனம் கல்வியும் கலைகளும் வளர்த்த நிறுவனம். இந்து மதத்தைக் காத்த நிறுவனம்.

இக்கல்விச் சாலையைப் பேணி நிர்வகித்து வருகிற அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தாருக்கும் எமது நல்லாசிகள். இக்கலைக்கூடம் மேலும் பல நூற்றாண்டுகள் காணட்டும். வட்டு இந்துக்கல்லூரியின் கல்விப்பணி சிறக்கட்டும் என நூற்றாண்டு விழாச் சபையின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'
'தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்'

பாடசாலை அபிவிருத்திச் சபையும்
பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்

இச்சிறப்பு மலருக்கு ஆசிச் செய்திகள்,
வாழ்த்துச் செய்திகள், அன்பளிப்புகள்
வழங்கிய அனைவருக்கும்
எமது நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

-நூற்றாண்டு விழாக் குழுவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிவம் தீபாவளி வாழ்த்து மடல் மற்றும் St. Micheal தீபாவளி நியூசலா வாழ்த்து மடல் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள ஸ்ரீகாந் புத்தகசாலை, யாழ்ப்பாணம், மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-9504)

### ஆட்டுக்கடா விற்பனைக்கு

11 மாத வயதுடைய துப்பரவான சானன் இன கடா நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. பட்டி தேவைக்கு பாவிக்க உகந்தது. க. சிவபாதசுந்தரமூர்த்தி அச்சுவேலி வீதி, நவக்கிரி, புத்தூர். (7958)

### புறொயிலர் மலிவு

புறொயிலர் கோழிகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா பாம், இணுவில். (சி-9506)

### பூச்சிக்கொல்லி

பூச்சிக்கொல்லி (இன்செக்டிஸ்ட்) மலத்தீனிலும் சிறந்தது. கறையான், எறும்பு, கொறவண்ண் போன்ற சகல பூச்சிகளையும் கட்டுப்படுத்த சிறந்தது. கண்ணன் ஸ்டோர்ஸ், மக்கள் வங்கி முன்பாக, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-9389]

### வீடு தேவை

ஆனைப்பந்திக்கும் நீர்வேலிக்கும் இடையில் பருத்தித்துறை றோட்டிற்கு அண்மையில் சிறிய வீடு அல்லது அனெக்ஸ் தேவை. நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளவும். ஸ்கைலைன்ஸ், 281 B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (7961)

### மணப்பெண் தேவை

வயது 43, Technical Graduate உள்ளூர் உத்தியோகத்தருக்கு 30-10-94க்கு முன்னர் முடிவெடுத்து வெளிநாடு வரவிரும்பும் கல்வி அறிவுள்ள மணமகள் மறுமணத்துக்கு தேவை. சீதனம், நிறம் தடையல்ல. ஜாதகத்துடனும் முழுவிவரங்களுடனும் விண்ணப்பிக்கவும். இல. 707, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33312)

### தவறிவிட்டது

கோண்டாவிலைச் சேர்ந்த வசந்தகுமாரியின் ஜெராக்ஸ், இரண்டு அடையாள அட்டைகள் (இராசேந்திரன், வசந்தகுமாரி) மற்றும் வட பகுதிக்கு உள்ளே வரும் அனுமதி அட்டை மற்றும் பொருள்களுடன் கைப்பை 12-10-94 அன்று கிளாலியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இ. வசந்தகுமாரி, ம. ம. ம. மனை, கோண்டாவில் என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். (33327)

### கடிகாரங்கள் திருத்தல்

உங்கள் மணிக்கூடுகள், றேடியோக்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், உங்கள் பாவித்த மணிக்கூடுகளை உதிரிப்பாகங்களுக்காக விற்றுக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய இடம் டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, கண்டி வீதி சாவகச்சேரி, தலைமையகம் 284, ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி, வானவில் அருகில்), யாழ்ப்பாணம். (சி-9386)

### இசை வகுப்புகள்

விஜயதசமி ஆரம்ப வகுப்புகளிற்கு சேரவிரும்புவோர் 5-10-94 (புதன்) முதல் 14-10-94 (வெள்ளி) வரை விண்ணப்பப் படிவங்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அலுவலக நேரம் 4-30 — 6-30 (மாலை) யாழோசை, 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33117)

### மிருதங்க வகுப்பு

தரமான ஆசிரியர் மூலம் சனி, ஞாயிறு மிருதங்க வகுப்புகள் நடைபெறுகின்றன. விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டியது: கோவிந்தபிள்ளை விஜயகுமார், இல. 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (33297)

---

# இளங்கலைஞர் மன்றம் நாள் வகுப்புகள்

இடம்: மன்ற கலா மண்டபம், நல்லூர்

**14-10-94** வெள்ளி மாலை 3-00 - 4-30 மணி வரை நாள் வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பெறும்

ஒவ்வொரு சனி, ஞாயிறு நாட்களில் காலை 8-00 — 12-00 மணிவரை சிறந்த இசைக் கலைஞர்களால்

★ வாய்ப்பாட்டு ★ வயலின் ★ வீணை ★ மிருதங்கம் ★ பரதநாட்டியம்

என்பன பயிற்றுவிக்கப்பெறும்.

— மேற்படி மன்றத்தினர்.

# 15-வது ஆண்டு இசை விழா

## தொடர்ந்து (15) பதினைந்து தினங்கள்

குறிப்பு:

இளங்கலைஞர் மன்ற 15 ஆவது ஆண்டு இசை விழா **10-02-1995 — 24-02-1995** வரை பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. இசை விழாவில் கலந்து நிகழ்ச்சிகள் வழங்க விரும்பும் இளங்கலைஞர்களிடமிருந்து வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், என்பவற்றில் தனி குழு நிகழ்ச்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்கள் தகுதியை உறுதிசெய்து 30-11-1994 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

— மேற்படி மன்றத்தலைவர்.

[சி-9320]

---

யாழ். மத்திய கல்லூரியின்

உதைபந்தாட்ட

# நூற்றாண்டு விழா

இன்றைய ஆட்டம்:

**MAHAJANA VS. J/CENTRAL**

(33307)

---

உ

இந்துமத குருமார் ஒன்றியம்

வடமராட்சிக் கிளை

## புதிய நிர்வாகசபைத் தெரிவும் மகாசபைக் கூட்டமும்

இடம்: பர்வதவர்த்தினி மண்டபம், சிவன் கோயில், பருத்தித்துறை

காலம்: 16-10-1994 ஞாயிறு பி.ப. 2மணி

அனைத்து இந்துமதகுருமார்களையும் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

— நன்றி —

செயலாளர்,
சு. சச்சிதானந்தக் குருக்கள்.

கிளைத் தலைவர்,
தா. வாசுதேவக் குருக்கள்.

[33326]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 12 — 06 — 1960

விண்ணில்: 16 — 10 — 1993

## திருமதி தேவதாஸ் சகாயமேரி (மேரி)

பாசமுடன் பறந்து திரிந்தாய்...!
நேசமுடன் உறவாடினாய்...!
உறுதியுடன் உழைத்தாய்...!
கண்ணீரை விடையாக்கி எம்மைப் பிரிந்தாய்!

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக நாளை (15-10-1994) சனி காலை 5-45 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்;
கணவன், மக்கள், மாமன்,
உறவினர்கள்.

10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(33293)

---

யா/கொக்குவில்

இந்து ஆரம்ப பாடசாலை

பழைய மாணவர் சங்கம்

# கலைவிழா நிகழ்ச்சி சந்தனத் தேன் கிண்ணம்

**11-09-1994**இல் நடைபெறவிருந்த குறிப்பிட்ட நிகழ்ச்சி **15-10-1994** பிற்பகல் 5-30மணி முதல் கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது என்பதை அபிமானிகளுக்கு அறியத்தருகின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

இசைக் கச்சேரி: செல்வன் ப. குமரேஸ் (பாடசாலை மாணவன்)

நாடகம்: எஸ். ரி. அரசு அவர்களின் நெறியாள்கையில்

பாரதியின் 'பாஞ்சாலியின் சபதம்'

எழுத்துருவாக்கம் — குழந்தை ம. சண்முகலிங்கம்
இசை — எம். கண்ணன்
தயாரிப்பு — நாடக அரங்கக் கல்லூரி

நிர்வாகசபை,
பழைய மாணவர் சங்கம்,
கொ. இ. ஆ. பாடசாலை.

[7962]

---

உ

'தொன்மை மறவேல்'

யாழ்ப்பாணம்

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

# ஆண்டுப் பொதுக்கூட்டமும் சிறப்புரையும்

15-10-94 சனிக்கிழமை மு.ப. 9-00 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை

தலைவர்:
செல்வி தி. பெரியதம்பி
(கல்விப் பணிப்பாளர், வலயம்-I)

சிறப்புரை:
பண்டிதர் க. சச்சிதானந்தன் M. Phil (Lond)

பரிசில் வழங்கல்:
திரு. வெ. இளங்குமரன்
(பொறுப்பாளர், தமிழ் வளர்ச்சிக் கழகம்)

(33309)

---

# 10ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி நிகழ்வும்



## ஸ்ரீலஸ்ரீ தி. கனகசபைக் குருக்கள் தியாகராசாக் குருக்கள்

(முன்னை நாள் கூட்டுறவுப் பரிசோதகரும், கட்டைவேலி, நெல்லியடி ப. நோ. கூ. சங்க கணக்காளரும், பிரபல சோதிடரும்)

அவதாரமானது: **11 — 06 — 1937**

மாயமானது: **05 — 10 — 1994**

அன்னார் 05-10-1994 இல் தனது பூவுலக வாழ்வை முடித்து விண்ணுலகப் பெருவாழ்வு பெற்று மாட்சிமை அடைந்த நாள்.

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று''

அன்பினின் விளைந்த ஆரமுது எவர்க்கும்
அறிவுரை பகரவல்ல அறிவமுது
நேர்மைமிகு நிருவாக திறமைமிக்கான்
யாரும் கூறுவது குற்றம் குற்றமென்றால்
குற்றம் குற்றமே என
ஓர்மமுடன் துணிந்துரைக்கும் கொள்கையினான்
ஒருபொழுதும் கரவென்பறியாத உத்தமனான்
அற்புத தேவனானான் - வெல்லன் கணேசனடி
நிழலின் கீழே, நற்பதம் ஞான்றான் அன்று
அப்பதம் நல்க நல்க வென
நம் இறை வேண்டுகின்றோம்.

இச் செய்தியை தங்களுக்கு உடன் அறியத்தர முடியாமைக்கு வருந்துகின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியா வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தவருக்கும் சிறப்பிக்க எண்ணியவர்களுக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றி.

திருமதி புவனேஸ்வரி தியாகராசாகுருக்கள், (மனைவி),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[33324]

---

# சைவத் தமிழ்...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

**இந்துக்கல்லூரிகள் சபை (1929இன் பின்)**

1927ஆம் ஆண்டு இக்கல்லூரிக்குக் காந்தியடிகளுடன் வருகை தந்தார். இந்துக்கல்லூரிகள் சபையினர் இக்கல்லூரியை 1929இல் பொறுப்பேற்றனர். இதன் பின் திரு. கே. சபாரத்தினசிங்கம் அவர்கள் (1929 - 1946) அதிபராக நியமிக்கப்பட்டார். 'சிங்கி மாஸ்ரர்' என அழைக்கப்பட்ட இவர் ஏழைச் சிறார்களினதும் பெண்களினதும் கல்விக்காக அயராது உழைத்தார். இவரது காலத்தில் இலவசக் கல்விமுறையும் அமுலுக்கு வந்ததால் மாணவர் தொகையும் அதிகரித்தது.

இவரின் பின் திரு. செ. சிவகுருநாதபிள்ளை அவர்கள் (1946 - 1969) இக்கல்லூரியின் அதிபரானார். இவரது காலத்தில் கல்லூரி பெருவளர்ச்சி கண்டது. கல்லூரியின் கிழக்குப் புறத்தில் ஏழு பரப்பு நிலம் கொள்வனவு செய்யப்பட்டு வகுப்பறைகள் அமைக்கப்பட்டன. இக்கல்லூரியின் முகப்பில் இன்று காட்சியளிக்கும் வள்ளியம்மை மண்டபம் திரு. சரவணமுத்து குமாரசாமி அவர்கள் தம் மனைவியின் பெயரால் அமைத்துக்கொடுத்ததாகும். இம்மண்டபத்தை 1953இல் குன்றக்குடி அடிகளார் திறந்து வைத்து ஆசியுரை வழங்கினார்.

இக்காலத்தில் விஞ்ஞானத் துறைக் கல்வியை ஆரம்பித்து விஞ்ஞான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதால் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்காக நாவலரின் மருமகனான திரு. வி. இராசசுந்தரம் அவர்கள் ஒரு விஞ்ஞானகூடத்தை அமைத்துக் கொடுத்தார். க. பொ. த. ப.(சா/த)பரீட்சையில் கல்லூரியும் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று வந்தது. இதன் பயனாக 1958இல் க. பொ. த. ப. (உ.த) கலைப்பிரிவு வகுப்புகள் இங்கே நிறுவப்பட்டன. இங்கிருந்து மாணவர்கள் ஆண்டுதோறும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாயினர். 1960இல் கல்லூரியும் அரசுடைமையானது.

திரு. க. கயிலாயநாதன் அவர்களும், திரு. க. தியாகராசபிள்ளை அவர்களும் (1969 - 1971) அதிபர்களாகப் பணியாற்றினர். இதன் ஆரம்ப பாடசாலை இக்காலத்தில் இணைக்கப்பட்டது.

இவர்களின் பின் முன்னாள் முகாமையாளர் நொத்தாரிசு சிதம்பரநாதபிள்ளையின் பேரனான திரு. க. அருணாசலம் அவர்கள் (1972-1978) இக்கல்லூரியின் அதிபரானார். இவருடைய காலத்தில் அரசுதவியுடன் பாடசாலையில் சில முக்கிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன. பாடசாலைக்குச் சொந்தமான விளையாட்டு மைதானம் கொள்வனவு செய்யப்பட்டமை, கணித, விஞ்ஞான, வர்த்தக உயர் வகுப்புகள் நிறுவப்பட்டமை இதற்கான வகுப்பறைகள் கொண்ட மேல்மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டமை என்பவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இவரின் பின் காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி. அதிபராக இருந்த திரு. கே. கே. நடராசா அவர்கள் (1978-1982) இக்கல்லூரியின் அதிபரானார். இவர் தன் காலத்தில் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் வாய்ந்த மேல்மாடிக் கட்டடத்தை அரசுதவியுடன் நிறுவினார்.

விஞ்ஞான கணித உயர் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், இக்கல்லூரியிலிருந்து பல மாணவர்கள் விஞ்ஞான கணித பீடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்தனர்.

காரைநகர் யாழ்ரன் கல்லூரி அதிபராகப் பணியாற்றிய திரு. நா. வேலுப்பிள்ளை அவர்கள் (1982 — 1989) இந்துக்கல்லூரியின் அதிபராகப் பணியேற்றார். இவரின் காலத்தில் அரசின் கொத்தணி முறை அமுலுக்கு வந்தது. இக்கல்லூரி மூலாதாரப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பெற்று, இதனுடன் பதினான்கு அயற் பாடசாலைகள் இணைக்கப்பட்டன. இவர் இவற்றைச் சிறப்புடன் நிர்வகித்தார்.

இக்கொத்தணியைச் சேர்ந்த அராலி இந்துக்கல்லூரி அதிபரான திரு. எஸ். தாஸ் அவர்கள் (1989 — 1993) இக்கல்லூரியின் அதிபராகப் பதவி பெற்றார். இக்காலத்தில் கல்லூரியில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததுடன் பலர் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பும் ஏற்பட்டது. 1990இல் பொறியியல் துறைக்குத் தெரிவான **செல்வன் ஏ. அற்புதராசா என்பவர் ஜனாதிபதி விருதைப் பெற்றமை கல்லூரிக்கோர் புகழாரமாயிற்று.**

இக்கல்லூரி நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இக்காலகட்டத்தில் இதன் அதிபராக திரு. நா. ஜெயநாயகம் அவர்கள் கடமையாற்றி வருகின்றார். இவர் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் அதிபராக முன்னர் பணியாற்றியவர். இவர் பாடசாலை அபிவிருத்திச்சபை, அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் பேராதரவைப் பெற்று, கல்லூரியின் அபிவிருத்திக்கும், புனரமைப்புக்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். இவர் பணி சிறந்து, கல்லூரி வளர எல்லோரதும் ஒத்துழைப்புக் கிடைப்பதாக.

வட்டு. இந்துக்கல்லூரியின் சேவையால் சைவத் தமிழ்ப் பண்பாடு வழுவாத ஒரு சமுதாய அமைப்பு இறுக்கமாகக் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. கல்லூரியின் நிறுவுனர் அம்பலவாண நாவலரின் நோக்கமும் இதுவே. எதிர்காலத்திலும் இப்பண்பாட்டு அம்சங்கள் அழிந்து போகாதவாறு இக்கல்லூரியினால் பாதுகாக்கப்படவேண்டும். ★

---

பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம் (வ-து)

## லொறிக்கு உருவமைத்தலும், வர்ணம் பூசுதலுக்குமான கேள்விப் பத்திரம்

எமது சங்கத்தின் தI - 4726 (27/2092) இலக்க லொறிக்கு உருவமைப்பதற்கும், லொறி முழுவதற்கும் வர்ணம் பூசுவதற்கும் இத்தால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றது.

இதற்கான கேள்விப் பத்திரப் படிவத்திற்கு ரூபா 25/- செலுத்தி எமது சங்கப் பணிமனையில் பெற்று, உங்கள் விண்ணப்பங்களை 1994 - 10 - 22 ஆம் திகதிக்கு முன் ''தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை'' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

- பொது முகாமையாளர்.

1994 - 10 - 12 [சி-9329]

---

## செம்மணி இந்துமயான சிரமதானம்

மேற்படி மயான சிரமதான வேலைகள் 16-10-94 ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் நடைபெற ஒழுங்கு செய்யப்படுவதுடன், மில்க்வைற் அதிபர் பல இன மரங்கள் நடுகைக்காக வழங்கி காலை 9-30 மணிக்கு இந்நிகழ்ச்சியைஅங்குரார்ப்பணம்செய்து வைப்பார். இந்த மயான பாவனையாளரை உள்ளடக்கிய எல்லாப் பொதுஸ்தாபன உறுப்பினர்களையும் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

செம்மணி இந்துமயான அபிவிருத்திச் சபை
நிர்வாகிகள்

374, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(33329)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


### விஜயதசமி சிறப்பு

நவராத்திரி முடிந்து இன்று விஜயதசமி. நவராத்திரி அன்னையின் மகிமையை ஏற்றிப் போற்றி வணங்கும் சக்தி வழிபாட்டுக்குரிய காலம். உலக வாழ்க்கைக்கு முக்கியமாகத் தேவைப்படும் வீரம், செல்வம், கல்வி ஆகிய வற்றினை அடைய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் காலமாகவும் நவராத்திரி கொள்ளப்படுகிறது.

உடல் வலிமை, பொருள் வலிமை, அறிவு வலிமை என்பன மனித வாழ்வின் மூல விசையாக உள்ள சக்திகள். அவற்றை மனிதன் அடைய வேண்டில் சக்தியின் அருளும் அன்பும் தேவை என்பதனையும் நவராத்திரி விரதம் எடுத்தியம்புகிறது.

உலகத்தில் வாழும் கோடானுகோடி சீவன்களைப் பெறாது பெற்று நிற்கும் நித்திய கன்னியாக விளங்குபவள் அன்னை பராசக்தி. கருணை வடிவமாகக் காட்சி தருபவள் ஆதிபராசக்தி. அதனாலேயே ''அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்'' என்றான் பராசக்தி தாசனான பாரதி.

மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான மூன்று முக்கிய அம்சங்களை சக்தியின் வடிவங்களாக வணங்கும் நவராத்திரியின் முடிவில், விஜயதசமி எனும் வெற்றி நாள் கொண்டாடப்படுகிறது. முன் சொன்ன உடல், பொருள், அறிவு வலிமைகளைப் பெற்றால் வாழ்க்கையில் வெற்றி கிடைக்கும் என்பது இதன் அர்த்தமாகிறது.

அதர்மம் நீங்கி, தர்மம் தழைத்தோங்கும் என்பதனை குறிக்கும் நாளாகவும் விஜயதசமி உள்ளது. கல்வி, கலைகளின் நாளாகவும், அவற்றை ஆரம்பிக்கும் நாளாகவும் விஜயதசமி விளங்குகிறது. சிறுவர்களுக்கு ஏடு தொடக்குதல், கலைப்பயில்வுகளை ஆரம்பித்தல் ஆகிய சுப நிகழ்வுகளுக்கு விஜயதசமி மிகவும் பொருத்தமான தாகும்.

அதனாலேயே கல்வி, கலை சம்பந்தமான ஆரம்ப நிகழ்வுகளை விஜயதசமியில் நடத்துவது எமது மக்களின் மரபாக விளங்குகிறது. இப்போது நூற்றாண்டு விழாக் காணும் பல கல்லூரிகள் நவராத்திரி மற்றும் விஜயதசமி நாட்களில் எமது முன்னோரால் ஆரம்பிக்கப்பட்டவையே. இன்று நூற்றாண்டு விழாக் கொண்டாடும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மற்றும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியன அதற்கு நல்ல உதாரணங்களாகும்.

கல்விக்கும், கலைகளுக்கும் உரிய நாளான நவராத்திரி— விஜயதசமி காலத்தில், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகி இருப்பது வெற்றிக்கு அறிகுறி என்று பரவலாகக் கருதப்படுகிறது. இந்தப் பேச்சுவார்த்தை வெற்றி பெறவேண்டும் என்று வாழ்த்திய மருதானை, கப்பித்தாவத்தை செல்வ விநாயகர் கோயில் பிரதமகுரு சண்முகரத்தினசர்மா இதனைக்குறிப்பிட்டுக் கூறினார்.

நவமி நாளை நல்ல காரியங்களுக்கு உகந்ததில்லை என்று இந்துக்கள் புறக்கணிப்பது உண்டுஆனால் மகாநவமி மிக சிறந்த சுபநாளாகக் கருதப்படுகிறது. விஜயதசமியோ வெற்றித் திருநாள். தசமி நாள்களில் மிகச் சிறப்புடைய நாள். எனவே யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்— அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சின் ஆரம்ப கட்டம் இந்நாட்களில் நடைபெறுவது நல்ல சகுனம்; மங்களமாக முடியும் என்று அவர் தெரிவித்தார்.

அவரது அந்தக் கருத்து செயலாக மாறவேண்டும் என்பதே தமிழர்களின் விருப்பமாகும். இன்றைய விஜயதசமி நாளில் அந்த விருப்பம் நிறைவேறப் பிரார்த்திப்பதால் அந்தப் பயன் உண்டாகும்.

இவ்வருட விஜயதசமி தமிழர்களின் கல்வி, கலைகளின் நாளாக மட்டுமன்றி அரசியல் முக்கியத்துவம் பெற்ற சிறப்பு நாளாகவும் மாறியுள்ளது. வீரம், செல்வம், கல்வி என்பனவற்றுடன் அரசியல் வலிமையும் மனிதனுக்குத் தேவை என்பதனை இவ்வருட விஜயதசமி வலியுறுத்துகிறது.

# நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 14

மழை காலத்தில் பொதுவாகப் பரவக்கூடிய நோய்களைத் தடுப்பதற்கான முன் முயற்சிகளில் யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

நோய்களை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் மாநகரமக்களைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பத்திரிகை குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

வழமையாக மழைக் காலங்களில் குடல் சார்ந்த நோய்களும், நுளம்பு, இலையான் போன்ற நோய்காவிகளினால் பரவும் நோய்களும் அதிகரிக்கும். இவற்றில் குறிப்பாக வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், மலேரியா, மூளைக் காய்ச்சல் போன்றவை கூடிய ஆபத்தானவை. இவற்றைத் தடுப்பதற்கும், கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

குறிப்பாக, வடிகால்களில் நீர் தேங்கியிருக்காமலும், குப்பை கூழங்களை ஒழுங்கு முறையில் எடுத்துச் செல்லவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் உணவுச் சாலைகள் கண்காணிப்பு சந்தையில் இறைச்சி, மீன் வேறு உணவுப் பொருள் விற்பனை கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. விசேடமாக நோய்காவி ஒழிப்புத் திட்டத்தில் வீடுவீடாக சுகாதார உதவியாளர்கள் சென்று ஆலோசனை வழங்கவும் சூழல் குறைகளை நிவர்த்தி செய்யவும் உதவுவர்.

பொதுமக்கள் எமது செயற்பாட்டிற்கு ஒத்துழைப்புத் தந்தால் மட்டும் எமது பணி நிறைவேறும். உதாரணமாக பொது இடங்களில் குப்பை கூழங்களைப் போடுவது, அசுத்தப்படுத்துவது போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும். உணவு சம்பந்தமான குறைபாடுகள் எங்கு காணப்படினும் தகவல் தந்தால் நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்.

வளங்கள் குறைந்த நிலையிலும், எமக்குப் பாதகமான சூழல் உள்ள நிலையிலும் நோய்களைக் கட்டுப்படுத்துவதில் எமது பணி நிறைவுபெற மக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என வேண்டுகின்றோம் .—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### இன்று

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் திரு. சி. சிவபாலசிங்கம் ''கந்தவேள் கருணை'' எனும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். திரு. கே.பாலச்சந்திரன் அறிமுகவுரையை நிகழ்த்துவார். (க)

# கண்டியில் மனித புதைகுழி: 4 எலும்புக் கூடுகள் மீட்பு

கொழும்பு, ஒக். 14

கண்டி மாவட்டம் — அங்கும்புற என்னுமிடத்தில் நேற்று தோண்டப்பட்ட புதைகுழி ஒன்றில் இருந்து நான்கு மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

கண்டி மேலதிக நீதிவான் டி. எம். சிறிவர்த்தன முன்னிலையில் இவை மீட்கப்பட்டன.

வியாங்கொட, நைவல — விசாலிய என்னுமிடத்திலும் மேலும் ஒரு புதைகுழி அத்தனகலை நீதிவான் அருணசிறிரணசிங்க முன்னிலையில் தோண்டப்பட்டது. (ஒ—எ)

### இன்பருட்டியில் வீதி விளக்குகள்

மக்களின் நலன் கருதி இன்பருட்டி கிராமத்தில் முக்கிய இடங்களில்வீதிவிளக்குகள்பொருத்தப்பட்டுள்ளன.

போரூட் கிராமிய சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் இந்த வீதிவிளக்குகளை அமைத்துள்ளது. (ஐ—173)

# வால்வ் கட்டை விளையாட்டு: சிறுவன் காயமடைந்தான்!

யாழ்ப்பாணம், ஒக். 14

சைக்கிள் ரியூப் வால்வ் கட்டைக்குள் தீக்குச்சு மருந்தை அடைத்து கல்லால் குத்தி வெடிக்க வைத்தபோது ஒருவர் படுகாயமடைந்தார்.

கரணவாய் வடக்கில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த பழநிநாதன் பிரசாந்த் (வயது 11) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

வெடிக்கவைத்தவர் எதுவித காயமுமின்றித் தப்பிக் கொண்டார் அருகில் இருந்த அவரது சகோதரரே காயமடைந்தார்.

காயமடைந்தவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ—15)

# சேவை செய்ய முன்வருவோருக்கு பதவியை விட்டுக் கொடுக்கத் தயார்!

## பிரதி அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தோடு இணைந்து அமைச்சர் பதவி பெறுவதற்கு இன்று சிலர் முயற்சிக்கின்றனர். அவர்களுக்குத் தேவை அமைச்சர் பதவியே: அவர்களது நோக்கம் மக்கள் சேவை அல்ல.

''உண்மையில் அவர்கள் மக்களுக்கு சேவையாற்ற விரும்பினால் எமது அமைச்சர் பதவியை அவர்களுக்கு விட்டுக் கொடுக்கத்தயார்''

இவ்வாறு அறிவித்துள்ளார் வர்த்தக, வாணிப, உணவுத் துறை பிரதியமைச்சர் பி. சந்திரசேகரன்.

[illegible] அண்மையில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு ஒன்றின் போது உரையாற்றுகையிலேயேஅவர் இப்படிக் கூறினார்.

இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமானையே அவர் மறைமுகமாக இவ்வாறு கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ—3)

# வர்த்தமானியில் ஆணைக்குழு சட்டமூலம்

கொழும்பு, ஒக். 14

நாட்டில் அச்சமும் பீதியும் நிலவிய காலத்தில் ஆட்கள் காணாமற் போனமை, கடத்திச் செல்லப்பட்டமை மற்றும் சட்டவிரோதமாக மரணதண்டனை விதிக்கப்பட்டமை ஆகியவை தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 3 பேர் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும் சட்டமூலம் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் பிரேரணையாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தேசியப் பட்டியல் எம். பி. பட்டி விரக்கூன் இச்சட்ட மூலத்தைக் கொண்டு வருகிறார்.

இந்த ஆணைக்குழுவின் தலைவரை பிரதமர் நியமிக்க இச்சட்ட மூலம் வழி செய்கிறது. (ஒ-எ)

# உதவி வைத்தியஅதிகாரிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 14

அரச உதவி வைத்திய அதிகாரிகளில் ஒரு பகுதியினர் 3 ஆயிரம் ரூபா பிரயாணப் படியும் மற்றும் சில கோரிக்கைகளையும் முன் வைத்து நேற்று முன்தினம் சுகாதார அமைச்சுக்கு முன்னால் கூடி நின்று ஆர்பாட்டம் செய்தனர்.

அரசாங்க மருத்துவர்களுக்கு வழங்கப்படும் பிரயாணப்படி தங்களுக்கு வழங்கப்படுவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

அமைச்சு இது தொடர்பாக அமைச்சரவைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளதாகவும் —

அமைச்சர்கள் இது குறித்து தீர்மானம் எடுக்கும் வரை அரச உதவி மருத்துவர்கள் பொறுத்திருக்க வேண்டும் என்றும் அமைச்சர் பௌஷி கூறினார்.

உதவி மருத்துவர்களுக்கு ஏற்கனவே ஆயிரம் ரூபா பயணப்படி வழங்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ-எ)

# பண்டார வன்னியனை தேசிய வீரனாக அறிவிக்குக

## வவுனியா நகர சபையில் தீர்மானம்

கொழும்பு, ஒக் 13

அந்நியரை எதிர்த்துப் போர் செய்து வீரமரணமடைந்த வன்னிப் பிரதேச மன்னனாகிய பண்டாரவன்னியனை தேசிய வீரனாகப் பிரகடனம் செய்ய வேண்டும், அம்மன்னனின் நினைவாக முத்திரை ஒன்று வெளியிட வேண்டும்.

இத்தகைய தீர்மானம் ஒன்று வவுனியா நகரசபையில் அண்மையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (உ—3)

# லிபரல் தலைவருக்கு எம். பி. பதவி சந்திரிகா தொடர்ந்து எதிர்ப்பு

லிபரல் கட்சித் தலைவர் டாக்டர் சணக அமரதுங்கா நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு பிரதமர் சந்திரிகா தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்ட லிபரல் கட்சியின் உபதலைவர் அஸித பெரேரா தொடர்ந்தும் எம். பியாக இருப்பார் என்று முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

ஆரம்பத்தில் டாக்டர் அமரதுங்காவையே முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் எம் பியாக நியமிக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. பிரதமர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்துஅஸித பெரேராவை ஒருமாத காலத்துக்கு எம். பியாக நியமிப்பது என்று முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்தது.

அமரதுங்காவின் நியமனத்துக்கு தொடர்ந்தும் பிரதமர் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் அஸித பெரேராவிடம் இருந்து இராஜினாமாவைக் கோருவதில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இதேவேளை— உறுதியளிக்கப்பட்ட படி அஸித பெரேராவை ராஜினாமாச் செய்ய வைத்து, அந்த இடத்துக்கு தம்மை நியமிக்க நடவடிக்கை எடுக்கும் படி டாக்டர் அமரதுங்க முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பைக் கேட்டுள்ளார்.

எனினும் அஸித பெரேராவை ராஜினாமாச் செய்யும் படி தாம் கோரப்போவதில்லை என்று அஷ்ரப் அமரதுங்காவுக்கு அறிவித்துள்ளார்.

இதனிடையில் அஸித பெரேரா பதவி விலகுவதற்கு லிபரல் கட்சி அவருக்கு ஒரு மாதக் காலக்கெடுவை வழங்கியுள்ளது. (ஒ—எ)

### கோண்டாவிலில் பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 14

தண்ணீர் அள்ளும் போது தவறிக் கிணற்றில் விழுந்து மரணமானதாகக் கூறி குடும்பப் பெண் ஒருவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கோண்டாவில் கிழக்கில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த இராமநாதன்கமலாதேவி (40 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

மரண விசாரணையின் பின் சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ஒ—15)

### தாழப்பறந்த புக்காரா விமானங்கள்!

தென்மராட்சி, ஒக். 14

நேற்று முன்தினம் புதன் கிழமை நள்ளிரவு 11.15 மணிக்கு இரண்டு புக்காரா விமானங்கள் கிளாலி கடற்பகுதிக்கு மேலாக தாழப்பறந்து வட்டமிட்டுப் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தின.

பின்னர் நள்ளிரவு 12.45 மணிக்கு ஹெலிக்கொப்டர் ஒன்றும் பளை நகரப்பகுதியை வட்டமிட்டுச் சென்றது.

நேற்று வியாழக்கிழமை அதிகாலையும் புக்காரா விமானங்கள் கிளாலிப் பகுதியை வட்டமிட்டுச்சென்றன. (ஒ—117)

### நாளை திறக்கப்படாது

நாளை அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டைப் பகுதிச் செயலகங்களும் விசாரணைப் பகுதிச் செயலகம், மோட்டார் ஊர்திப்பதிவுச் செயலகம், தொடர்பு சேவைச் செயலகம் என்பன திறக்கப்படமாட்டாது என்பதை பொதுமக்களின் கவனத்துக்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர். (ஒ)

## அரிசி, மா, சீனி ஆகியனவற்றுக்கு

# கூட்டுறவு சங்கங்களின் விற்பனவு வரி ரத்து!

கொழும்பு, ஒக். 14

மா, அரிசி மற்றும் சீனி ஆகியவற்றின் விற்பனை மீது கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மொத்த விற்பனவு வரி அறவிடுவதை ரத்துச் செய்வது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

### திறப்புவிழா

தென்மராட்சி, ஒக். 14

பளை புலோப்பளை சென். பீற்றர்ஸ் கடற்றொழிலாளர் சங்கத்தினரால் ரூபா 27 ஆயிரம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாலர் பாடசாலை கட்டடமும் சிறுவர் பூங்காவும் இன்று வெள்ளி காலை 10.00 மணிக்கு முகமாலை பங்குத் தந்தை வண. பிதா அருட்திரு. ஸ்ரெலின் அடிகளார் அவர்களால் திறந்து வைக்கப்படும். (இ—117)

# நவராத்திரி விழா - ஒரு சிந்தனை

பண்டிதர். ம. ந. கடம்பேசுவரன்
(யா/ புனித பத்திரிசியார் கல்லூரி)

நவராத்திரி விழா பற்றிப் பல்வேறு கர்ணபரம்பரைக் கதைகளும் விளக்கங்களும் உள்ளன. பெண் தெய்வ வழிபாடாகிய இந்நிகழ்ச்சியின் நிறைவாக விஜயதசமித் தினம் பெருவிழாவாக– கொண்டாடப்படுகின்றது. கலைகளுக்குரிய விழாவாகக் கலைவிழாவாக– புதியன தொடங்குதற்குரிய விழாவாக இத்தினம் கருதப்படுகின்றது. நவராத்திரியையும் அதன்பேறாக அமைந்த விஜயதசமியையும் புதியதோர் சிந்தனைக்குட்படுத்தினால் அவ்விழா ஏன் முக்கியத்துவம் பெறுகின்றதென்பது தெளிவாகும்.

உயிரினங்களனைத்துமே இன்பவாழ்வு வேண்டி நிற்கின்றன. அவற்றுள் மனிதன் தனக்கு உகந்ததையும், அல்லாததையும் தனது பகுத்தறிவுச் சிந்தனையினாலே வேறுபட்ட முறையில் வகுத்து ஏனைய உயிரினங்களிலும் உயர்ந்து நிற்கின்றான்.

தன்னறிவினால் இயற்கையைச் சாதகமாக்க முனைகின்றான் அல்லது அதற்கு ஈடுகொடுக்க எத்தனிக்கின்றான். இயற்கையைக்கூர்ந்து அவதானித்துச் செயற்பட்டுத் தனது ஆக்கத்திறனை வெளிப்படுத்துகின்றான். அந்த வெளிப்பாடு விஞ்ஞானமாக மிளிர்கின்றது. **அவ்வாறு முடியாத வேளைகளில் இயற்கைச் சக்திக்குத் தலை வணங்குகின்றான்.** அந்தச் சக்திக்கு விழாவெடுக்கின்றான். முன்னோராற் கொண்டாடப்பட்டும் மதிப்பளிக்கப்பட்டும் நடைபெற்றுவந்த விழாக்கள் இன்றும் கொண்டாடப்படுகின்றன.

ஆன்மீகவாதிகள் ஒருவகையில் விளக்கமளிக்க அறிவியலாளரும் வரலாற்றாசிரியரும் வெவ்வேறு வகையில் விளக்கந்தரப் பல திறத்தனவாகச் செய்திகள் பரவி நிலவுகின்றன. வாழ்வியல் நோக்கில் விழாக்களை எண்ணிப் பார்ப்பவர்களுக்கு பின்வரும் கருத்து விருந்தாகும்.

மனித வாழ்விற்குத் தேவையான பொருள்களை மூன்று வகையுள் அடக்க எண்ணினால் அது வீரம் பொருள் அறிவு என்பனவாக அமையும். இதனை உணர்ந்த பெரியோர்கள் அதற்குத் தெய்வத் தன்மையைக் கொடுத்துச் சிறப்பித்தார்கள். ஆதிகால மனிதன் வீரமொன்றையே நம்பினான். அதனால் உடற்பலத்தையும் துணிவையுமே போற்றினான்.

நாளாக கிடைத்த உணவுப் பொருள்களைத் தேடிப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தான். தேவை ஏற்பட்டால் மட்டும் உணவாகிய பொருளை நாடி ஓடும் நிலைதவிர்த்துக்கொண்டான். அந்தப் பொருளாகிய செல்வத்தைத் தமக்குள்ளே பரிமாறத் தொடங்கினான். இந்த முறையே பண்டமாற்றுக்கு வித்திட்டது எனலாம். இவ்வாறு உணவையோ பொருள்களையோ பாதுகாப்பதற்கும் தம்மைப் பாதுகாப்பதற்கும் வீரம் பொருள் என்பனவற்றோடு அறிவின் அவசியத்தையும் உணர்ந்தான்.

இறைச்சியைத் தேனில் இட்டுப் பாதுகாக்கும் அறிவை, அனுபவத்தாற் பெற்றுப் ப[illegible] இவ்வாறு அ[illegible] வாழ்வாகிய சக்[illegible]

றும்அச்சாணியாக இந்த மூன்றும் திகழ்ந்ததை உணர்ந்தான். வாழ்வின் தத்துவம் இதுவெனக் கண்டான்.

விழாக்களெல்லாம் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டன.ஆதலினால் மூன்றினையும் கடவுளோடு சேர்த்துக்கொண்டான். அதன் சிறப்புத்தான் நவராத்திரி எனக்கொள்வோம்.

மூன்றும் சிறந்தன என்பதால் ஒவ்வொன்றிற்கும் மும்மூன்று தினங்களைக் கொடுத்தும் இவை ஒன்று சேர்ந்தால் வலிமை என்பதை உணர்த்தும் வகையில் பத்தாவது நாளையும் கொண்டாடுதலைக் காணமுடியும். இந்த மூன்றும் உலக மனித வாழ்விலே சர்வ வல்லமையுள்ள பொருள்களாகும்.

இது போன்றதே ஏனைய விழாக்களும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. உதாரணம் ஒன்றின் மூலம் இதனை விளங்கிக் கொள்ளமுடியும். தாவரங்களின் நிலைபேற்றிற்கு அதன் காழ்ப்பகுதி — வைரப்பகுதி உதவுகின்றது. அகவைரம் உடைய மரங்களிற் பெரும்பாலானவை நீண்ட காலம் வாழ்பவை. புறவைரம் உடைய புல்லினத்துள் பெரும்பாலானவை நீண்ட காலம் வாழுவதில்லை.

''புறக்காழனவே புல்லென மொழிப அகக்காழனவே மரமென மொழிப'' என வேறுபடுத்திக் காட்டுவார் தொல்காப்பியர்.

மரத்துக்குக் காழ்ப்பகுதி உதவுவது போன்று, சமயம் நிலைபெற்றிருக்கத் தத்துவங்கள் உதவுகின்றன. தத்துவங்களை உணர்த்தாத விழாக்களால் ஏது பயன்? தத்துவங்களை உணர்த்தாத தலைக்களால் ஏது பயன்?

# விஜயதசமி நிகழ்ச்சிகள்

இன்றைய விஜயதசமி நாளை ஒட்டி குடா நாட்டில் உள்ள ஆலயங்களிலும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

ஆலயங்களில் விஜயதசமி பூசையைத் தொடர்ந்து மானம்பூ திருவிழா நடைபெறும்.

பாடசாலைகளில் மாணவர்கள் பங்கு கொள்ளும் வாணி விழா கலை நிகழ்ச்சிகளும் ஏடு தொடக்கலும் இடம் பெறும்.

சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்பாள், அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர், வண்ணை ஸ்ரீ வீரமாகாளிஅம்மன் ஆகிய ஆலயங்களில் இன்று விஜயதசமி பூசையும் மானம்பூ திருவிழாவும் நடைபெற உள்ளன.

யாழ். புதிய கல்வி நிலையம், யாழ். ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி நகர சபை, யாழ். ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளை, யாழ். மாவட்ட 'இந்து இளைஞர் பேரவை பணிமனை, கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை ஆகிய இடங்களிலும் வாணி விழா நடைபெறவுள்ளது. (ஜ—30—51—117)

### புலிகளின் குரல் வானொலியில்

14 — 10 — 1994

வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி — நூல் அறிமுகம்— நங்கூரம் சஞ்சிகையின் இரண்டாம் ஆண்டு நிறைவு மலர். சிறுகதை — சந்திரா தவபாலசிங்கம் எழுதிய ''மலர்வு'' கவிதை — பூவேந்தன் எழுதிய 'நிமிர்ந்துபார்''
★ 8-25 — கணப்பொழுது சி.கண்ணம்மா எழுதிய ''கப்டன் திலகா''
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் வே. பாலகுமாரன் எழுதிய ''அடக்குமுறை கட்கு எதிரான அடையாளமாகிவிட்ட ஆங்சான் சூசி அம்மையார்
★ 8-50 —வாத்தியகானங்கள்.

15— 10 — 1994

சனி காலை

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# சமுதாயத்தைச் சீரமைக்க சமயமும் சட்டமும் அவசியம்

## அறிவியல் அரங்கில் உரை

''சமுதாயத்தை நெறிப்படுத்தி சீரமைக்க சமயமும் சட்டமும் அத்தியாவசியமாகின்றன''

சாவகச்சேரி நகரசபை நூலக வாசகர் வட்டத்தினரின் மாதாந்த அறிவியல் அரங்கில்கடந்தமாதம் 28ஆம் திகதி நடைபெற்ற விவாதத்தில் நடுவராகக் கடமையாற்றிய நீதிமன்ற நீதிபதி திரு.மு. திருநாவுக்கரசு தமது இறுதி உரையில் இவ்வாறு கூறினார்.

''சமுதாயத்தை சீரமைத்து நெறிப்படுத்துவது சமயமா சட்டமா'' என்ற தலைப்பில் இடம்பெற்ற விவாத அரங்கில் சமயம் தான் என ஆசிரியர் எஸ். மார்க்கண்டுவும், சட்டம் தான் என அதிபர் அ. பொ. செல்லையாவும் வாதிட்டனர்

நீதிபதி திருநாவுக்கரசு மேலும் தமது உரையில் கூறியதாவது:

''சமுதாயத்தை சட்டம் வழிப்படுத்துகிறது; சமயம் நெறிப்படுத்துகிறது. சமயமும் சட்டமும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போவதால் தான் சமுதாயம் நெறி தவறாமல் இயங்கிவருகின்றது. என்றார் அவர். (க—117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்கள் முழு அளவில் வெற்றி அளிக்கும்

## லயனல் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 14
விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும், அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் ஆரம்பமாகியுள்ள பேச்சுக்கள் நூற்றுக்கு நூறு வெற்றி அளிக்கும்.

இப்படி அரசகுழுப் பிரதிநிதி லயனல் பெர்னாண்டோ நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்றுக் காலை நடைபெற்ற முதலாவது சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் நண்பகல் சுபாஷ் ஹோட்டலில் வைத்து செய்தியாளர்களின் சரமாரியான கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கையில் மேலும் கூறியதாவது:

பேச்சுக்கள் சுமுகமாகவும், நல்லெண்ண அடிப்படையிலும் நடந்தன.

வடபகுதி மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம்.

கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்திலும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை மக்கள் பெறக்கூடிய நிலையை உருவாக்குவதே எமது முதல் பணியாக இருக்கும்.

இப்படி அவர் கூறினார்.

அரச குழுவில் இடம்பெறும் ஏனைய உறுப்பினர்களும் முதல்சுற்றுப் பேச்சுக்கள் சுமுகமாக நடந்தன என்று செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் தெரிவித்தனர்.

(இ-ஐ-3)

# பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையை திறக்குமாறு புலிகள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 14
யாழ். குடாநாட்டு மக்களின் உடனடிப் பிரச்சினையாகவுள்ள போக்குவரத்தைச் சீராக்குவதற்கு பூநகரி — சங்குப்பிட்டிப் பாதையை திறக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேற்றைய பேச்சுக்களின் போது வலியுறுத்தினர்.

விடுதலைப் புலிகளின் சார்பில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கே. கரிகாலன் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருள்கள் குடாநாட்டுக்குள் தங்கு தடையின்றி வருவதற்கு ஏதுவாக உடனடியாக குடாநாட்டுக்கான போக்குவரத்துப்பாதை திறக்கப்படுவது அவசியம்.

மக்களின் இன்றைய முக்கிய பிரச்சினையாக இந்தப் பிரச்சினை அமைவதால் இதன் அவசியத்தை நாம் அரச குழுவிடம் வலியுறுத்திக் கூறினோம்.

குறிப்பாக பூநகரி — சங்குப்பிட்டி பாதையை திறக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்திக் கூறினோம்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-ஐ-3)



அரச பிரதிநிதிகளை வரவேற்பதற்கு திரண்ட மக்கள் கூட்டத்தில் சிறிய பகுதியினர்.
படங்கள்; ராஜ்குமார், தவம்

### பி.பி.ஸி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பாணம் வரமுடியாது போனது.

நேற்று பலாலியில் தங்கிய இவர் இன்று கப்பல் முலமாக பருத்தித்துறைக்கு வந்து சேருவார் எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

### முதலில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெர்னாண்டோவைக் கைகுலுக்கி வரவேற்றார். பின்னர் திரு. பெர்னாண்டோ தூதுக்குழுவின் ஏனைய உறுப்பினர்களை கலாநிதி பாலசிங்கத்துக்கு அறிமுகஞ் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து அவர் ஏனைய பிரதிநிதிகளையும் கைகுலுக்கி வரவேற்றார்.

அரசுத் தூதுக்குழுவினர் விடுதலைப்புலிகளின் விசேட வாகனம் ஒன்றில் ஏறி அமர்ந்த போது, மக்கள் கரகோஷம் செய்து ஆரவாரித்தனர்.

வாகனத்தைச் சுற்றி மக்கள் முண்டியடித்த வண்ணம் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். இதனால் வாகனத்தை 15நிமிடங்கள் வரையில் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. பெரும் பிரயத்தனங்களின் மத்தியில் வாகனம் 9-20 மணியளவில் பவனியாக புறப்பட்டது. பின்னர் அரசுப் பிரதிநிதிகள் சுபாஷ் ஹோட்டலுக்குச் சென்றனர். அங்கிருந்து அவர்கள் சுண்டிக்குளியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் (எ-3-4-9)

## மக்கள் ஹெலிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன் மற்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். பிரதிநிதி மேரி பேர்கின்ஸ் ஆகியோர் மைதானத்தை வந்தடைந்தனர். ஹெலிக்கொப்டர் கறுப்புப் புள்ளியாக வானத்தில் தெரிவதைக் கண்டதும் மக்கள் ஆரவாரம் செய்ய ஆரம்பித்தனர்.

பல்கலைக்கழகத்தின் வடகிழக்கு மூலைப்பக்கமாக வந்த ஹெலிக்கொப்டர் சரியாக 9 மணிக்கு வானத்தில் சுற்றிவந்த திசைப்பக்கமாக பார்த்தவாறு தரை இறங்கியது.

கரும்பச்சை நிறமான அந்த ஹெலிக்கொப்டரில் சி. எச். 524 என்ற இலக்கம் காணப்பட்டது. ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் விமானப்படை என்ற வாக்கியம் எழுதப்பட்டிருந்தது.

அதன் இருபக்கங்களிலும் கலிபர் துப்பாக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. முன்பக்கத்தில் பைலட்டும் உதவி பைலட்டும் அமர்ந்திருந்தனர். அவர்கள் கரும்பச்சை நிற உடுப்புகளை அணிந்திருந்தனர். பின்னால் இரு பக்கங்களிலும் தலா 2 விமானப்படை அதிகாரிகள் ஆயுதங்களுடன் அமர்ந்திருந்தனர். ரூபவாஹினி படப்பிடிப்பாளர் சந்திரலால் மனமந்திர என்பவரும் ஹெலிக்கொப்டரில் வந்திருந்தார்.

ஹெலிக்கொப்டரின் விசிறி புழுதியை வாரிக்கொட்டிய போதும் மக்கள் அதனையும் பொருட்படுத்தாமல் ஹெலிக்கொப்டரைச் சுற்றிவளைத்து நின்றனர். (எ-3-4-9)

## இயல்பு நிலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பேச்சுவார்த்தை மேசையின் ஒரு பக்கத்தில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளான தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு. ஆ. ரவி, தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. சு. டொமினிக், தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. வே. கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி ஆகியோர் அமர்ந்திருந்தனர். அவர்களுடன் மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் இருந்தார்.

மறுபக்கத்தில் அரசுப் பிரதிநிதிகளான திரு. லயனல் பெர்னாண்டோ, திரு. பாலபத்த பெண்டி, திரு. ராஜன் ஆசீர்வாதம், திரு. நவின் குணரத்தின ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

பேச்சுவார்த்தை மேசையில் ஒலிப்பதிவு வசதிகள் பொருத்தப்பட்டிருந்தன.

பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில் படம் பிடிப்பதற்கு படப்பிடிப்பாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

பேச்சுவார்த்தைகள் நட்புறவுச் சூழ்நிலையிலும், சுமுகமாகவும் நடைபெற்றதாக திரு. கரிகாலன் நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

முதற்சுற்றுப் பேச்சு மு.ப. 11.30 மணிக்கு முடிவடைந்தது.

இரண்டாம் சுற்றுப் பேச்சு பி.ப. 1.00மணி முதல்மாலை 5.30 மணி வரை நடைபெற்றது.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்தே நேற்றைய இரண்டு [illegible] பேச்சுகளின் போதும் இரு தரப்பாரும் கலந்தாலோசித்தனர்.

வடபகுதி மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு மீண்டும் கொண்டு வருவது குறித்து பிரதானமாக ஆராயப்பட்டதாக திரு. கரிகாலன் தெரிவித்தார்.

பேசுவார்த்தைகள் இன்று தொடர்ந்து நடைபெறும். இன்றைய முதல் சுற்றுப்பேச்சு காலை 8.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை நடைபெறும். இன்றைய இரண்டாம் சுற்றுப் பேச்சு பிற்பகல் 1.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை நடைபெறும்.

இரண்டாம் சுற்றுப் பேச்சு முடிந்ததும் —

பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்ட விடயங்கள், மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்து (பி.ப.2.30 மணிக்கு) கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்படும். (அ-3)



அரசாங்கப் பிரதிநிதிகள் ஹெலியிலிருந்து இறங்கியதும் விடியோ படப்பிடிப்பாளர் அவர்களைக்''கிளிக்''செய்து கொள்கின்றார்.

# கப்பல் கப்டன் விடுதலை விவகாரம் கொழும்பு பத்திரிகைகளில் செய்திகள்

கொழும்பு, ஒக். 14
விடுதலைப் புலிகளினால் மூழ்கடிக்கப்பட்ட கடற்படைக் கப்பல் 'சாகரவர்த்தனா' வின் கப்டன் போயாகொட மற்றும் படையினரின் விடுதலை பற்றியும் —

பலாலி முகாமில் உள்ள 14 விடுதலைப் புலிகளின் விடுதலை பற்றியும் — கொழும்புப் பத்திரிகைகள் நேற்று செய்திகளை வெளியிட்டிருந்தன.

எனினும் இச்செய்திகளை செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவோ அல்லது ஆயுதப்படை வட்டாரங்களோ உறுதி செய்யவில்லை என்று பி.பி.ஸி. சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியதற்கு அடையாளமாக கைதிகள் பரிமாற்றம் இடம்பெறக்கூடும் என்ற நம்பிக்கை நிலவி வருகின்றது.

பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டுள்ளதை அடுத்து விடுதலைப் புலிகள் தங்களிடமுள்ள போர்க்கைதிகளில் 10 பேரை விடுதலை செய்தனர்.

இம்முறையும் நல்லெண்ணத்தைக் காட்டுவதற்கு போர்க் கைதிகளில் சிலரை விடுதலைப் புலிகள் விடுவிக்கும் பெரு வாய்ப்பிருப்பதாகவும் —

அரசும் அதற்கு மாற்று நடவடிக்கையாக கைதியாகவுள்ள விடுதலைப் புலிகளை விடுதலை செய்யும் வாய்ப்பிருப்பதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர் என்று பி.பி.ஸி. சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

(இ-எ-6)

## லயனல் 'பக்ஸ்' செய்தி

யாழ். வந்து சேர்ந்தது பற்றிய 'பக்ஸ்' (Fax) செய்தி ஒன்று நேற்று திரு லயனல் பெர்னாண்டோவினால் பிரதமர் சந்திரிகாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

யாழ். மக்கள் அரசுப் பிரதிநிதிகளை கோலாகலமாக வரவேற்றனர் என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. போர்க் கைதிகள் விடுதலை பற்றி அச்செய்தியில் குறிப்பிடப்படவில்லை.

பி.பி.ஸி. சிங்களச் செய்தியில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

## கிழக்கில் தாக்குதல்கள் 4 . படையினர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக் 14
விடுதலைப் புலிகள் கல்முனையிலும், மட்டக்களப்பிலும் நடத்திய தாக்குதல்களில் பொலீஸ் கொமாண்டோ படையைச் சேர்ந்த நால்வர் கொல்லப்பட்டனர்.

ஆயுதப்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் சிங்களச் சேவை அறிவித்தது.

நேற்று முன்தினம் இரவு கல்முனை — வாழைச்சேனை வீதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸ் ஜீப் வண்டி விடுதலைப் புலிகளின் நிலக்கண்ணித் தாக்குதலுக்கு இலக்கானது. அதில் இன்ஸ்பெக்டர் இரத்தினாயக்கா, கான்ஸ்டபிள் ஜயசுந்தர ஆகியோர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை மட்டக்களப்பில் திங்கொடப்பகுதியில் வீதித்தடைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் கண்ணி வெடித்தாக்குதலில் இரண்டு பொலீஸார் கொல்லப்பட்டனர் எனறு தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த புதன் கிழமை மணலாறு பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-6)

### மன்னாரில் இரு படையினர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14
கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார்த்தீவில் ரோந்து வந்த இராணுவத்தினரைவழி மறித்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதன் போது இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

ரி 56 ரக துப்பாக்கிகள் 2, அதற்குரிய ரவைக்கூடுகள் 2, நடுத்தர ரவைகள் 60 ஆகியன இராணுவத்தினரிடமிருந்து விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன. (ஒ-எ)

### சந்திரிகா மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 14
பிரதமர் சந்திரிகா சிங்கப்பூர் பயணத்தை அண்மையில் மேற்கொண்ட போது அவரின் கீழ் உள்ள அமைச்சுகளுக்குப் பதில் நியமனங்கள் செய்யப்படவில்லை. இ. அரசமைப்பை பூரணமாக புறக்கணிக்கும் சம்பவம்.

ஐ.தே.க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா இது சம்பந்தமாக விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.

(இ-எ-6)

### நடிகர்கள் உண்ணாவிரதம்

சென்னை, ஒக்.17
தமிழக திரைப்பட இயக்குநர்கள், அதிபர்கள் மற்றும் நடிகர்கள், நடிகைகள் திங்களன்று சென்னையில் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை வளாகத்தில் ஒரு நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

திரு. சிவாஜிகணேசன் இந்த உண்ணாவிரதத்தை தொடக்கி வைத்தார். இதில் திரைப்பட இயக்குநர் கே. பாலசந்தர், நடிகர்கள் கமலஹாசன், ரஜனிகாந்த் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திரைப்பட அதிபர்களுக்கும் விநியோகஸ்தர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள திரைப்பட உரிமை சம்பந்தமான பிரச்சினையை மாநில அரசு தீர்த்து வைக்க வேண்டும். என்று கோரியே இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது (ஒ)



அரச பிரதிநிதிகளை வரவேற்க விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச் செல்வன். செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி மேரி பேர்கின்ஸ் ஆகியோர் யாழ். பல்கலைக்கழக பிரதான கட்டடத்துக்கு அருகே அமர்ந்திருந்த போது எடுக்கப்பட்ட படம்.

## 10 சிதைந்த சடலங்கள் மன்னார் கடலில் மீட்பு!

மன்னார், ஒக். 14
மன்னார் கடற்பரப்பில் பத்துப் பேரின் சிதைந்த சடலங்களை கடற்படையினர் கண்டுபிடித்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தச்சடலங்கள் அடையாளம் காணமுடியாத அளவுக்கு மிக மோசமாகப் பழுதடைந்து இருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

'சாகரவர்த்தனா, கப்பல் புலிகளால் தாக்கி தகர்க்கப்பட்ட சமயம் அதில் இருந்த கடற்படையினரின் சடலங்களாக இவை இருக்கலாம் என நம்பப்படுகிறது. (ஒ-4)

# கோயில் சொத்துக்களை நிர்வாகம் கண்ணியமாகக் கையாள வேண்டும்

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரை

''கோவில் நிர்வாகம் என்பது வாள்முனையில் நடப்பது போன்றது. கோவில் சொத்துக்களைக் கண்ணியத்துடன் கையாள வேண்டும்''

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை நடத்திய நல்லைக் கந்தன் மகோற்சவ சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு 'இந்து தர்மம்'' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் தலைமை வகித்துப் பேசிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு கூறினார்.

கடந்த சனிக்கிழமை நல்லை ஆதீனத்தில் விழா நடைபெற்றது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் கூறியதாவது:

இன்று பல கோவில்களின் பரிபாலனம் காவல்துறையின் கண்காணிப்பில் உள்ளது. பரிபாலன சபைத் தெரிவுகள் அவர்களாலே நடத்தப்படுகின்றன. அவர்கள் தமது பணிகளின் மத்தியில் கோயில் பிரச்சினைகளைச் சமாளிக்க பெரும் சிரமப்பட வேண்டியுள்ளது. ஏன் இந்த நிலை..? இதனை அறங்காவலர்கள் சிந்திக்க வேண்டும். எமது சமயம் கூறும் வாழ்க்கை நெறிகளையும் சைவத்தின் உறுதியான வளர்ச்சிக்கும் ஏற்ற கருத்துக்களைத் தாங்கி வேதங்களில் கூறப்பட்ட ஒழுங்குகளைச் சைவ மக்கள் தெரிந்து கொள்ளக் கூடியதாக இந்து தர்மம் சஞ்சிகை வளர வேண்டும் இவ்வாறு அவர் பேசும்போது கூறினார்.

இந்து தர்மம் சஞ்சிகையை வெளியிட்டு யாழ் பல்கலைக் கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் உரை நிகழ்த்தினார்.

நூலின் முதல் பிரதியை பேராசிரியர் சண்முகதாசிடமிருந்து திரு. எஸ். இராஜேஸ்வரன் பெற்றுக் கொண்டார்.

நல்லை ஆதீன முதல்வர் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம், பண்டிதர் மு. கந்தையா, திரு. சி. சக்திகிரீவன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிற்றம்பலம் மங்கள விளக்கேற்றினார்.

நல்லைக் கந்தன் மஹோற்சவ சமயஅறிவுப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கான தங்கம், வெள்ளிப் பதக்கங்களையும் பரிசில்களையும் பேராசிரியர் சண்முகதாஸ் வழங்கினார்.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவியின் திருமுறை ஓதலும் இடம் பெற்றது.

(க-111)


## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு கனகரத்தினம்

(நியூஸ் ஏஜெண்ட்)
தாவளை — வட்டுக்கோட்டை

வட்டுக்கோட்டை, வட்டு கிழக்கு தாவளையைச் சேர்ந்த கார்த்திகேசு கனகரத்தினம் நேற்று(13-10-94) காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், சசிதரன் (திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர், (மடு உ. அ. பணிமனை), சசிகலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சசிகலா (ஆசிரியை, தட்சணமருதமடுக் கோயில் அ.த.க. பாடசாலை), க.தில்லைவாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகாரத்தினம், பாலரத்தினம், தனரத்தினம், பூபாலசிங்கம் ஆகியோரின் சகோதரனும், துர்க்காலோஜினி, நிருஷன், தனுஷ், சிரோமிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
சசிதரன்
(மகன்)

(33344)


மேலும் மரணஅறிவித்தல்கள் 2ஆம்'பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14 - 10 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org